விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 002 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 06 ஞாயிற்றுக்கிழமை (21.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் பொருட்களை உங்கள் வீட்டு வாசலில் நேரடியாக டெலிவரி செய்ய கடல் சரக்கு சேவையைத் தேடுகிறீர்களா?
உங்கள் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப முழு கொள்கலன் ஏற்றுமதிகள் (FCL) மற்றும் கொள்கலன் குறைவான ஏற்றுமதிகள் (LCL) ஆகியவற்றை நாங்கள் வழங்குகிறோம். (5481)
GTV LOGISTICS 011 4 654 444

## அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு டிசம்பர் 31க்குள் நிவாரணம் வழங்குக!



### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் அரசாங்கம் வழங்கும் நிவாரண நிதிகளை, எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் மக்களுக்கு வழங்கி முடிக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

## ஆலய வழிபாட்டுக்குச் சென்ற தாய் விபத்தில் மகள் கண்முன்னே ஸ்தலத்தில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

ஆலய வழிபாட்டுக்காக அர்ச்சனைப் பொருட்களுடன் தனது மகளுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற தாய் ஒருவர் வீதி விபத்தில் மகள் கண்முன்னே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் பொம்மை வெளிப்பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் மூளாய்ப் பகுதி

23ஆம் பக்கம் பார்க்க

## சுவர் விழுந்ததில் 17 வயது சிறுவன் பலி

### யாழ்.குருநகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சுவர் இடிந்து விழுந்ததில் 17 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

23ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்

# கருத்துக்களை வழங்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பாக எதிர்வரும் 2026ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் தமது கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் வழங்குமாறு பொதுமக்களிடம் நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார்.



(02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை வருகிறார் எஸ்.ஜெய்சங்கர்

### தமிழரசு - சங்கு கூட்டணியுடன் கலந்துரையாடுவார்



(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் எதிர்வரும் 23ஆம் திகதி ஒரு

23ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி விகாரைக்கு முன் இன்று எதிர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக அடாத்தாக கையகப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகளை விடுவிக்குமாறும், விகாரையின் விகாராதிபதிக்கு வழங்கப்படும் கௌரவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு முன்பாக இன்று ஞாயிற்றுக்கிழமை (21) காலை 9 மணிக்கு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக வலி. வடக்கு பிரதேச சபை

23ஆம் பக்கம் பார்க்க

## பண்டிகையை முன்னிட்டு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

கிறிஸ்துமஸ் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள்

23ஆம் பக்கம் பார்க்க

## டித்வா பேரிடர் பாதிப்பிலிருந்து முழுமையாக மீள்வதற்கு இரண்டு ஆண்டுகள் தேவை

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

(கொழும்பு)

டித்வா பேரிடர் பாதிப்பிலிருந்து முழுமையாக மீள்வதற்கு குறைந்தது இரண்டு ஆண்டுகள் தேவைப்படலாம் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று

23ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்துக் ...

புதிய சட்டமூலம் குறித்து ஊடகங்களுக்கு விசேட அறிக்கையொன்றை விடுத்த அமைச்சர், தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு மனித உரிமைகள் மற்றும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் புதிய சட்டத்தைக் கொண்டு வருவோம் எனத் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் வாக்குறுதி அளித்திருந்ததைச் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன தலைமையில் 17 பேர் கொண்ட நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்த நிபுணர் குழு கடந்த 11 மாதங்களாக மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் மூன்று மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்தை தன்னிடம் கையளித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இது ஒரு நுணுக்கமான மற்றும் உணர்வுபூர்வமான சட்டமூலம் என்பதால் நேரடியாக அமைச்சரவைக்கோ அல்லது பாராளுமன்றத்திற்கோ சமர்ப்பிப்பதற்கு முன்னர் மக்களின் கருத்துக்களைக் கேட்டு அவர்களைத் தெளிவுபடுத்த வேண்டும் என நாம் நம்புகிறோம் என அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார குறிப்பிட்டார்.

இந்தச் சட்டமூலத்தின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலப் பிரதிகள் நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.moj.gov.lk இல் பதிவேற்றப்பட்டுள்ளன. (ம-7)

## நத்தார் ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறையும் நல்லாயன் ஆன்மீகப் பணியகமும் இணைந்து நடத்தும் நத்தார் கரோல் செப ஆராதனை நிகழ்வானது நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா, யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் பி.ஜே.ஜெபரெட்ணம், தென்னிந்திய திருச்சபையின் முன்னால் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் மற்றும் நல்லூர் சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி)


### வாகனங்கள் தேவை

உங்களிடம் முச்சக்கர வண்டி, மோட்டார்சைக்கிள், CAR, VAN இருந்தால் நீங்கள் எங்களுடன் இணைந்து பணியாற்றலாம்.
*பதிவு இலவசம்*
(C-365)
"Uber Jaffna" இல.1978, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்
070 755 5755
070 612 3125

### விற்பனைக்கு

லான் மாஸ்ரர்ப் பெட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தேவையானோர் தொடர்பு கொள்ளவும்.
(C-4635)
தொடர்புகளுக்கு:
077 923 4242

### வாகனங்கள் தேவை

உங்களிடம் THREE WHEELER, CAR, VAN, LORRY இருந்தால் உங்களை எம்முடன் பதிவு செய்து உங்களுக்கான சவாரிகளை நாம் தருவோம். மாதாந்தம் 100,000/-க்கு மேல் சம்பாதிக்க முடியும்.
(Full Time / Part Time) (C-364)
"PickMe" இல.210, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்
076 944 7737
076 366 7737

### வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42ம் லேனில் இரண்டு அறைகள் (AC / NON AC) இணைந்த குளியலறைகளுடன் கூடிய தொடர்மாடி வீடு, தனி அறை நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.
(6343)
075 278 6033

### பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் : 30,000/=
(6342)
077 327 6502

### வேலையாட்கள் தேவை

வடமராட்சி நெல்லியடியில் கிறீம் ஹவுஸ் ஒன்றிற்கு ஆண் வேலையாட்கள் உடன் தேவை.
வேலை மற்றும் சம்பள விபரங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு: (C-4637)
077 377 3197

### வீடு விற்பனைக்கு


கொக்குவில் கிழக்கு, புகையிரதப் பாதைக்கு மேற்காக 5 அறைகள், 2குளியலறை, பெரியஹோல், தனிவெட்டுக்கிணறு, மாபிள்பதித்த கூரை சீலிங் அடித்த 2 பரப்பில் அமைந்த வீடு உடன் விற்பனைக்குண்டு.
(6317)
தொடர்பு : 071 426 9086

### கடை வாடகைக்கு உண்டு

மானிப்பாய் வீதி ஒட்டு மடச் சந்தியில் இருந்து 100m தூரத்தில் 3 கடைத் தொகுதி வாடகைக்கு உண்டு.
12 அடி அகலம், 27 அடி நீளம்
(6341)
தொடர்புகளுக்கு:
077 411 8851, 076 882 8694


## மரண அறிவித்தல்

தோற்றம்
23 - 03 - 1958



மறைவு
20 - 12 - 2025

## சின்னத்தம்பி கமலநாதன்

மத்தொனி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சின்னத்தம்பி கமலநாதன் அவர்கள் நேற்று *(20.12.2025)* சனிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவயோகநாதன், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் பாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சாந்தினி அவர்களின் அன்புக் கணவரும் தாட்சாயினி அவர்களின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சித்தவுடையார் வீடு, கரவெட்டி மத்தியில் இன்று *(21.12.2025)* ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் *2.00* மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 899 8023
077 333 3607
077 352 9219

*தகவல்:*
குடும்பத்தினர்
(C-4639)

## 18ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
27 . 07 . 1976



துப்பாக்கி குண்டின் பிடியில்
21 . 12 . 2007

அமரர் **வே.முத்துக்குமார் சிவபாலன் (பேபி)**

(வட்டுக்கோட்டை மண்ணின் வீரமைந்தன்)

நண்பா!
இது இப்படி ஆகுமென்று எவர் நினைத்தார்
நிஜம் என்பதை ஒவ்வ மனம் இன்னும் மறுக்கிறது
துரோகத்தால் கயவர் உனை சாய்த்தனர்
காலத்தால் அவர் மாண்பர்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உனை மறவாத வட்டுக்கோட்டை நண்பர்கள்
(6344)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 846 பேர் கைது

போதைப்பொருள் அச்சுறுத்தலை நாட்டிலிருந்து ஒழிப்பதற்கான "முழு நாடுமே ஒன்றாக" நடவடிக்கையின் கீழ் கடந்த 24 மணித்தியாலங்களில் 846 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெரோயின், ஐஸ், கொக்கேய்ன் உள்ளிட்ட போதைப்பொருட்களுடன் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 10 பேர் குறித்து மேலதிக விசாரணைகளுக்காக தடுப்புக்காவல் உத்தரவுகள் பெறப்பட்டுள்ளன.

அத்துடன் போதைப்பொருளுக்கு அடிமையான 16 பேர் புனர்வாழ்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. *(ம-7)*




WE'RE HIRING

JOIN OUR TEAM
JAFFNA BRANCH

ASSISTANT MANAGER | STUDENT ADVISOR | CALL CENTER EXECUTIVE

- வயது எல்லை: 20 – 30 (MALE / FEMALE)
- ஆங்கிலமும் தமிழும் சரளமாக பேசும் திறன்
- வெளிநாட்டு கல்வி ஆலோசனை துறையில் 1–2 வருடங்கள் அனுபவம் அவசியம் (ASSISTANT MANAGER / STUDENT ADVISOR)
- தலைமைத்துவம் மற்றும் குழுப் பணித் திறன்கள் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- Degree அல்லது சமமான தகுதி (ASSISTANT MANAGER ONLY)
- சுயமாக செயல்படும் திறன் மற்றும் இலக்குநோக்கி செயல்படும் மனப்பாங்கு அவசியம்
- கவர்ச்சிகரமான சம்பளம் + கமிஷன்

உங்கள் சுயவிபரக் கோவையை
info@icfs.lk க்கு அனுப்பவும்.

ICFS EDUCATION (PVT) LTD
EDUCATION YAALPAANAM (PVT) LTD

(C-361)


# மரண அறிவித்தல்

## பரமுப்பிள்ளை சோமாஸ்கந்தராசா



பிறப்பு 25.12.1932 இறப்பு 17.12.2025

கரணவாய் வடக்கு கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமுப்பிள்ளை சோமாஸ்கந்தராசா அவர்கள் கடந்த *(17.12.2025)* புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் இளைய புதல்வனும் காலஞ்சென்ற இளையதம்பி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம், சின்னத்தம்பி, குருசாமி, தவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவபாக்கியம், பரமசிவம், செல்வராசா, இராஜேஸ்வரி,இராதாகிருஷ்ணன் மற்றும் கனகரட்ணம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஈஸ்வரன் (ஜேர்மனி), ரகுராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நிர்மலாதேவி, கலைவாணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுவாஸ்திகா, பிரமிளா, தாரகா, திருஷான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(21.12.2025)* ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"ஈஸ்வரி வாசா"
இளையதம்பி பிளேஸ்,
கொற்றாவத்தை.

*தகவல்:*
பெறாமக்கள்
077 612 8127

(C-4638)

# மரண அறிவித்தல்



## கிருஷ்ணபிள்ளை கணேசன்

(ஓய்வுநிலை அதிபர் – யா/ அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை)

கொத்தியாவத்தை அல்வாய் வடமத்தியைப் பிறப்பிடமாகவும் கூத்தாடியம்பதி அல்வாய் வடமத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை கணேசன் அவர்கள் நேற்று *(20.12.2025)* சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கிருஷ்ணபிள்ளை - இலட்சுமி தம்பதியரின் ஏகபுதல்வனும் பொன்னையா - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் தயாநிதி அவர்களின் அன்புக் கணவவரும் பாரதிதாசன், கண்ணதாசன்(கனடா), காலஞ்சென்ற கௌசல்யா, பிறேமதாசன்(லண்டன்), கல்யாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராணி, திருச்செல்வி, கவிதா, விநாயகமூர்த்தி(வரதர்) ஆகியோரின் மாமனாரும் கௌமிதா, அனுசன், வினுஜா, விதுசன், தஸ்விதன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை *(22.12.2025)* திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


"பொதிகை"
0777965254, 0774108791

தகவல்:
குடும்பத்தினர்

(C-4640)

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 - 10 - 1941



மறைவு 20 - 12 - 2025

## சரவணமுத்து திருஞானசம்பந்தமூர்த்தி

(இளைப்பாறிய நீர்ப்பாசன தொழில்நுட்ப உதவியாளர்)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கம்பர்மலையை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய நீர்ப்பாசன தொழில்நுட்ப உதவியாளர் சரவணமுத்து திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள் நேற்று *(20.12.2025)* சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் சின்னையா - நேசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் பரமேஸ்வரி அவர்களின் கணவரும் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, வினாயகமூர்த்தி, சத்தியமூர்த்தி, சரஸ்வதி, பத்மாவதி, செல்வராணி ஆகியோரின் சகோதரரும் சிவரஞ்சன், சிவரஞ்சினி, காலஞ்சென்ற சிவஜோதி மற்றும் சிவகலாபன், சிவபானு ஆகியோரின பாசமிகு தந்தையும் கயல்விழி, ரவீந்திரன், தனுசிகா, தவராசா, நவநீதன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வசந்த்,கேசானி, பிருத்துவி, ஆராத்தியா, பரிக்சித், அக்சித், லோகசித் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை *(22.12.2025)* திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகவல்:*
குடும்பத்தினர்

(1823)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூனியர் ஆசியக்கிண்ண இறுதிப்போட்டி: இந்தியா-பாகிஸ்தான் இன்று பலப்பரீட்சை




19 வயதிற்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் இந்திய மற்றும் இலங்கை பலப்பரீட்சை நடத்தின.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது.

இதனையடுத்து 139 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 18 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது.

இதேவேளை குறித்த தொடரினுடைய 2ஆவது அரையிறுதிப் போட்டியில் பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் பலப்பரீட்சை நடத்தின இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 26.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இந்தநிலையில் 122 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 16.3 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது.

இதன்படி 19 வயதிற்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு இந்திய மற்றும் பாகிஸ்தான் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

குறித்த தொடரின் இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை டுபாயில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# தென்னாபிரிக்காவை வீழ்த்தி ரி-20 தொடரை வென்ற இந்தியா!




இந்தியா- தென்னாபிரிக்கா இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரின் 5 ஆவது மற்றும் இறுதிப் போட்டி அகமதாபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி பந்து வீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 231 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக திலக் வர்மா 42 பந்தில் 73 ஓட்டங்களும், ஹர்திக் பாண்ட்யா 25 பந்தில் 63 ஓட்டங்களும் எடுத்தனர்.

தென்னாபிரிக்கா சார்பில் கார்பின் போஷ் 2 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து, 232 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி தென்னாபிரிக்கா அணி களமிறங்கியது. டி காக் அதிரடியாக ஆடினார். 35 பந்தில் 68 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். மற்ற வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை. இறுதியில், தென்னாபிரிக்க அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 201 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 30 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்தியா ரி-20 தொடரை 3-1 என கைப்பற்றி அசத்தியது. (3)

# அசாமில் ரயிலுடன் மோதி எட்டு யானைகள் உயிரிழப்பு



அசாமின் ஹோஜாய் மாவட்டத்தில் நேற்று அதிகாலை சாய்ராங் - புதுடில்லி இடையிலான பயணத்தை மேற்கொள்ளும் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயிலுடன் யானைகள் கூட்டமொன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த கோர விபத்தில் எட்டு காட்டு யானைகள் உயிரிழந்ததாகவும், ஒரு யானை காயமடைந்ததாகவும் இந்திய வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், இந்த விபத்தில் குறித்த ரயிலின் ஐந்து பெட்டிகளும் இயந்திரமும் தடம் புரண்டன, எனினும், அதில் பயணித்த பயணிகளுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்று வடகிழக்கு எல்லைப்புற ரயில்வே செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

புதுடில்லி செல்லும் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் நேற்று அதிகாலை 2.17 மணியளவில் ஹோஜாய் மாவட்டத்தின் சாங்ஜூராய் பகுதியில் யானைகளுடன் மோதி விபத்துக்குள்ளானதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதனால், குறித்த மார்க்கமூடான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டதுடன், பல ரயில்கள் மாற்றுப் பாதைகளுக்கு திருப்பி விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (3)

# சிரியாவில் பயங்கரவாத அமைப்பு மீது அமெரிக்கா பாரிய தாக்குதல்!



சிரியாவில் அமெரிக்கப் படைகள் மீது நடத்தப்பட்ட கொடிய தாக்குதலுக்குப் பதிலடியாக, இஸ்லாமிய அரசு குழு (IS) மீது தனது இராணுவம் "பாரிய தாக்குதலை" நடத்தியதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அதன்படி, மத்திய சிரியா முழுவதும் பல இடங்களில் 70 இற்கும் மேற்பட்ட ஐஎஸ் இலக்குகள் மீது, போர் விமானங்கள், ஹெலிகொப்டர்கள் மற்றும் பீரங்கிகள் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க மத்திய கட்டளை நிறுவனமான சென்ட்காம் தெரிவித்துள்ளது.

அடையாளம் காணப்பட்ட ஐ.எஸ் உட்கட்டமைப்புகள் மற்றும் ஆயுத தளங்களை குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட இந்த துல்லிய தாக்குதலில் ஜோர்தானின் விமானங்களும் ஈடுபட்டுள்ளன.

ஐஎஸ்ஸுக்கு எதிரான ஒபரேசன் ஹாக்கி ஸ்டிரைக் வெள்ளிக்கிழமை கிழக்கு நேரப்படி மாலை 4 மணிக்கு தொடங்கப்பட்டதாக ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் இந்தோ-பசுபிக் பகுதிகளில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளை வழிநடத்தும் சென்ட்காம் எக்ஸில் பதவிட்ட அறிக்கையால் சுட்டிக்காட்டியுள்ளது. (3)

# நடிகர் ஸ்ரீனிவாசன் காலமானார்

இந்திய மலையாள நடிகர் ஸ்ரீனிவாசன் தனது 69 ஆவது வயதில் உடல்நலக்குறைவு காரணமாக காலமானதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த சிலநாட்களாக உடல்நலக் குறைவு காரணமாக கொச்சியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அவர் காலமானார்.



நடிகரும், இயக்குநருமான ஸ்ரீனிவாசன் மலையாளம், தமிழ் உள்ளிட்ட 225 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் பணியாற்றியுள்ளார்.

தேசிய திரைப்பட விருதுகள், கேரள மாநில திரைப்பட விருதுகள், தென்னிந்திய பிலிம்பேர் விருதுகள் மற்றும் எழுத்தாளர், நடிகர் மற்றும் திரைப்படத் தயாரிப்பாளராக அவரது பங்களிப்புகளுக்காக பல வாழ்நாள் சாதனையாளர் அங்கீகாரங்கள் உட்பட ஏராளமான விருதுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர்

## திருமதி சாந்தினி வாகீசன் அவர்களின் மணிவிழாச் சிறப்பு மலர்



### சீரிய பணிகள் செய்த செம்மல்

யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் வலி. கிழக்கில் முதன்மையான ஆரம்பப் பாடசாலையாகப் பிரகாசிக்கிறது. இப் பாடசாலையிலிருந்து அதிகளவான பிள்ளைகள் புலமைப்பரிசில் (தரம் 05) பரீட்சையில் சித்தி பெறுகிறார்கள்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னணி வகிக்கிறார்கள். இதற்கான முதன்மையான காரணங்களில் ஒன்று இப் பாடசாலையின் அதிபர். இத்தகு ஆளுமை, அறிவு, அர்ப்பணிப்பு மிக்க அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் அவர்கள் அறுபது அகவையில் பணி நிறைவு காண்கிறார்கள்.

அவர் ஆசிரியக் குடும்பத்தில் பிறந்தவர். கணவர் ஓய்வுநிலை அதிபர், சகோதரி சிரேஷ்ட விரிவுரையாளர், பிள்ளைகளும் பட்ட மேற்படிப்புக்களைப் பெற்று உயர்ந்து நிற்கிறார்கள்.

இது அவரது குடும்பச் சூழல். இவற்றுக்கு அப்பால் மிக இறுக்கமான சைவ ஆசார மரபுப் பேணுகை, கட்டுக்கோப்பான எளிய வாழ்வு, சம்பளத்திற்கு மேலதிகமாகப் பணி புரியும் கொள்கை இவைகள் அவரது தனி இயல்புகள். இத்தகு ஒருவர் தம் துறைப்பணியில் ஓய்வு பெறுவது சிறிது சங்கடம் தந்தாலும் அவர் தொடர்ந்து கல்வி, சமயப் பணிகளில் முன்னிற்பார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

செந்தமிழ்க் கடவுளான முருகன் திருவருளால் அவரது குடும்ப வாழ்வியல் மற்றும் பொது வாழ்வியல் யாவும் செழிக்கப் பிரார்த்தித்து வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம். வாழ்க வளமுடன்.

சிவஸ்ரீ கு. தியாகராஜக்குருக்கள்
(நீர்வை மணி ஐயா)
செல்லக் கதிர்காம தேவஸ்தானம்,நீர்வேலி.




திருமதி
# சாந்தினி வாகீசன்
S.L.P.S- II

முதல்நியமனம்: ஆசிரியர்
28.11.1989

ஆசிரியர் யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
28.11.1989–31.12.1992

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை –ஆசிரியப்பயிற்சி
01.01.1993–31.12.1994

யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்– ஆசிரியர்
01.01.1995–13.09.2005

யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் – அதிபர்
14.09.2005–06.10.2015

யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் – அதிபர்
07.10.2015–20.12.2025

மொத்த சேவைக்காலம்
36 வருடங்கள் 22 நாட்கள்



### செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி

மதிப்புமிக்க திருமதி சாந்தினி வாகீசன் அதிபர் அவர்களின் மணிவிழாக் குறித்து ஆசிச்செய்தி வழங்குவதில் ஆனந்தமடைகிறேன்.

புகழ்பூத்த கோப்பாயில் கற்றுத்தேர்ந்த ஆசிரியத் தம்பதிகள் அமரர்கள் பொன்னம்பலம்- ஆச்சிமுத்து அவர்களின் சிரேஷ்ட புத்திரியாகப் பிறந்து கல்வியில் உயர்ந்து பெருமை பெற்றவர் இவர். புகழ்பூத்த அதிபர் வாகீசனின் மனையாளாக மிளிர்ந்து மண்ணில் நல்லவண்ணம் வாழும் அம்மையாரை இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

சமூகத்தை நேசிக்கும் பண்பும் பணிவும் நிறைந்த அம்மையார் நிறைந்த கல்விப் பணியாற்றி ஓய்வு பெறுகின்றார். அவரது சமூகப் பணிகள் ஓயாது தொடர்ந்து சமூகத்துக்கு நற்பணியாற்ற இறைவனை வேண்டுகின்றேன்.

அம்மையாருக்கு விழா எடுக்கும் விழாக் குழுவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சகல சிறப்போடும் மணிவிழா நாயகி நிறைவாக வாழ துர்க்கை அம்மனை வேண்டி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**தலைவர்- ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**



### வடக்கு மாகாண ஆளுநரின் வாழ்த்துச் செய்தி

தனது 60 ஆவது அகவையைப் பூர்த்தி செய்து இளைப்பாறும் யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் அவர்களை கௌரவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் மணி விழாவினையொட்டி வெளியிடப்படும் "சாந்தினியம்" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மன மகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி. சாந்தினி வாகீசன் அவர்கள் தனது சேவைக்காலத்தில் பாடசாலையினதும், மாணவர்களினதும் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் பங்காற்றியதன் மூலம், பாடசாலையின் பௌதீக வளங்கள் பெருமளவு சீர்செய்யப்பட்டதுடன் மாணவர்களும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் உயர்பெறுபேறுகளையும், புத்தாக்கப் போட்டிகளில் தேசிய மட்டம் வரை பங்குகொண்டு பரிசில்களையும் பெறக்கூடிய வகையிலும் தனது தலைமைத்துவத்தை வழங்கியுள்ளமை பாராட்டத்தக்கது.

அவரது சேவைக்காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களை பாடசாலைச் சமூகம் என்றும் நினைவில் கொள்ளும்.

மணி விழாக்காணும் திருமதி. சாந்தினி வாகீசன் அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துவதுடன் ஓய்வுக்காலத்தில் சமய சமூகப் பணிகளில் ஈடுபட்டு எமது சமுதாயத்திற்கு மேன்மேலும் நற்பணி புரிய வேண்டும் என வேண்டி அவரைக் கௌரவிக்கும் வகையிலான மணிவிழா, சிறப்பாக இடம்பெறவும் அவர் தொடர்பில் வெளியிடப்படும் "சாந்தினியம்" மலர் சிறப்பாக வெளிவரவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.நாகலிங்கம் வேதநாயகன்**
ஆளுநர்-வடக்கு மாகாணம்



### சாந்தினியம் மலருக்கான ஆசிச் செய்தி

எந்த நிலையிலுள்ள பாடசாலையையும் முன்னிலைப்படுத்தும்திறன், பின் தங்கிய நிலையிலுள்ள பாடசாலையையும் முன்னேற்றப் பாதையில் உயர்த்தும் ஆற்றல் ஆகியவை சாந்தினி அம்மையாரிடம் இயல்பாகவே உள்ளவை. யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தை மேன்மைமிக்க நிலைக்குக் கொண்டு வந்த அம்மையாரின் தலைமைப்பண்பு மிக்க ஆளுமைத்திறன் சிறப்பு மிக்கது. மாணவர்கள் யாழ் நகர்ப்பகுதிப் பாடசாலைகளை நோக்கிப் படையெடுக்கும் வேளையில், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தை தரம் உயர்த்தியவர் அம்மையார். அனைவருக்கும் முன்னுதாரணமான ஊக்கமாகும். 'சாந்தினியம்' என்ற மலரின் பெயருக்கு ஏற்ப சாந்தமாய், இனிமையாய் நற்குணங்களின் மணம் வீசும் ஆளுமைதான் சாந்தினி அம்மையார். ஆன்மீக ஈடுபாடு, அறநெறி நாட்டம், நற்குண சீலங்கள் உங்கள் உன்னத வாழ்வியலைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் எங்கள் சிவகுரு ஆதீன நல்லூர் மகோற்சவ கால பஜனைக்கு மாணவர்களைத் தவறாமல் அழைத்து வருகின்றமை இத்தகைய ஆன்மீக ஈடுபாட்டின் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சாந்தினி வாகீசன் அம்மையாரின் சமய, சமூக, ஆன்மீக, அறப்பணிகள் தொடர்ந்தும் சிறக்கவும், ஓய்வுக்காலம் ஆனந்தமாக ஆரோக்கியமாக விளங்கிடவும், அம்மையார் தீர்க்க சுமங்கலியாக நிறைவான வாழ்வு வாழ்ந்திடவும் எல்லாம் வல்ல நல்லூர் ஆறுமுகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

தீர்க்க சுமங்கலி பவ!

தவத்திரு வேலன் சுவாமிகள்
ஆதீனமுதல்வர்- சிவகுரு ஆதீனம்,
நல்லூர்.



### யாழ்.மாவட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி


ஆசிரியராக, அதிபராகத் தனது தன்னலமற்ற உன்னதமான கல்விப் பணியை ஆற்றிக் கல்வியில் உயரியநிலையை மாணவர்கள் அடைந்திட வித்திட்டவர் அதிபர் திருமதி. சாந்தினி வாகீசன் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை.

யா/கோப்பாய் பிரதேச செயலராக நான் கடமையாற்றிய காலப்பகுதியில் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் இவர் அதிபராகச் சேவையாற்றி "பான்ட்" வாத்திய இசைக் கருவிகள், கணினி அறைக்கான வசதி, வலைப்பந்தாட்டத் திடலுக்கான காணி, போட்டோப் பிரதி இயந்திரம் போன்றவற்றைப் பெற்று மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டவர் என்பதனை நான் நன்கறிவேன்.

அத்துடன் பாடசாலைக்கான புதிய கட்டட வசதியினையும் ஏற்படுத்தி பௌதீக ரீதியான வளர்ச்சியிலே அர்ப்பணிப்பான சேவையை ஆற்றியிருந்தார். ஆசிரியராக, அதிபராக தன்னுடைய ஆளுமையை வெளிப்படுத்தி, பலரது மனங்களிலும் இடம் பிடித்த அதிபர் திருமதி. சாந்தினி வாகீசன் அவர்களின் சேவை யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

"சாந்தினியம்" இனிதே மலர்ந்திட எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அதிபர் அவர்கள் ஓய்வுக் காலத்தில் தேகாரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

திரு.மருதலிங்கம் பிரதீபன்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்-யாழ்ப்பாணம்.



### மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

ஒரு பாடசாலையின் வெற்றி அப் பாடசாலையின் சிறந்த தலைமைத்துவத்தின்தும் அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களது சேவையினதும் மற்றும் ஆரோக்கியம் மிக்க பாடசாலைப் பங்காளிகளினதும் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. அந்தவகையில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் இயங்குகின்ற வகை II பாடசாலைகளில் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் முதனிலைப் பாடசாலையாக விளங்கி கல்விப்பணி ஆற்றி வருகின்றமை சிறப்பானது.

யாழ் வலயத்தின் ஏனைய முன்னணி ஆரம்பப் பாடசாலைகளோடு போட்டியிடுகின்ற அளவிற்கு தொடர்ச்சியாக நற்பெறுபேறுகளைப் பெற்றுவருகின்றது. தங்களுடைய பிள்ளைகளை, இப்பாடசாலையில் சேர்த்துவிட வேண்டும் என்ற பெற்றோர்களின் பேரவாவினை தரம் 1 இற்கான விண்ணப்பங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றமை இப்பாடசாலையின் தலைமைத்துவத்திற்குக் கிடைக்கின்ற மிகப் பெரிய பரிசாகும்.

ஆளுமை மிக்க அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறுகின்ற திருமதி சாந்தினி வாகீசன் அவர்களுடைய அர்ப்பணிப்பு மிக்க சேவையைக் கௌரவிப்பதுடன் அவர்களுடைய ஓய்வுக்காலம் உடல், உள ஆரோக்கியத்துடனும் பல்வேறுபட்ட சமுகப் பணிகளில் ஈடுபட்டு மகிழ்ச்சிகரமானதாகவும் அமைய வேண்டும் என வாழ்த்துகின்றேன்

திரு. யோ. ஜெயச்சந்திரன்
மாகாணக் கல்விப்பணிப்பாளர்-வடக்கு மாகாணம்.

(6194)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கான அரசியல் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்குமா தி.மு.க அரசு?

அபிமன்யு


2009ஆம் ஆண்டு இறுதி யுத்தம் உச்சம்பெற்றிருந்த நேரம். வன்னிப்பெரு நிலப்பரப்பின் மொத்த சனத்தொகையும் ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் முடக்கப்பட்டிருந்தது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என இலங்கை அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட குறித்த போரில் அப்பாவிப் பொதுமக்கள் செத்துக் குவிந்து கொண்டிருந்தனர்.

நந்திக் கடலின் பேரலை இரச்சலிலும் நூறு மடங்கு அதிகமாக அப்பாவிப் பொதுமக்களின் அவலக்குரல் உலகையே உலுக்கிக் கொண்டிருந்தது.

"சர்வதேசமே எம்மைக் காப்பாற்று" என்ற ஈழத்து உயிர்களின் வேண்டுதல் நிறைவேறாதா என எஞ்சியிருந்த தமிழினம் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தது.

ஈழத் தமிழினத்தின் இன்னல் தீர்க்க தொப்புள் கொடி உறவான



தமிழகம் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

ஆயினும் லண்டன் மாநகரம் நீரில் மூழ்கும் போது நீரோ மன்னன் பிடில் வாசித்த கதையாய் அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கள்ள மௌனம் காத்தார் என்பதற்குள் இருக்கும் கொடுமைத்தனம் அடுத்த சில நாட்களில் வெளிப்பட்டது.

ஆம், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் ஈழத் தமிழினத்தின் மீதும், தீராத வடுவைக் கொண்டிருந்த இந்திய மத்திய அரசான காங்கிரஸ் அரசு தனது மொத்த வன்மத்தையும் கொட்டித் தீர்க்க முனைந்தது.

அந்த முனைப்புக்கு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அடங்கியிருந்தார் என்பதே தமிழினத்தின் அழிவுக்கான காரணம் எனின் அதை மறுத்துவிட முடியாது.

2009 ஏப்ரல் 27ஆம் திகதி காலை மிகப்பெரிய அதிசயம் நடந்தது. இலங்கை இராணுவம் ஈழத் தமிழினத்தின் மீது மேற்கொள்ளும் போரை உடன் நிறுத்த வேண்டும் எனக்கோரி அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி உண்ணா விரதப் போராட்டத்தில் குதித்தார்.

காலை 5.45 மணிக்கு மெரினாக் கடற்கரையில் தொடங்கிய உண்ணா விரதம் வெறும் ஏழு மணி நேரத்தில் நிறைவுற்றது. அன்று மதியம் 12.45 மணியளவில் இலங்கை அரசு போர் நிறுத்தத்திற்கு சம்மதம் தெரிவித்துவிட்டது.

இனி வன்னிப்பெரு நிலப்பரப்பில் அப்பாவி உயிர்கள் போகாது. ஈழத்தில் சமாதானம் மலர்ந்து விட்டது என அறிவித்து தனது உண்ணா நோன்பை நிறைவு செய்தார் கலைஞர். ஈழத் தமிழினத்திற்காக கொந்தளித்துக் கொண்டிருந்த தமிழினம் மகிழ்வில் குதூகலித்தது.

இனி எம் தொப்புள் கொடி உறவுகளின் உயிர் ஒன்றுகூட அநியாயமாகப் பிரியாது என நம்பிக் கொண்டது.

துரதிஷ்டம் கலைஞரின் மேற்குறித்த அறிவித்தலுக்குப் பின்னரே அதிகமாக ஈழத் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

ஈழத் தமிழினமும் தமிழகமும் சுதாகரிப்பதற்குள் இலங்கையில் பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டதாக இலங்கை ஆட்சியாளர்கள் மார் தட்டினர்.

கொடுமை; கலைஞரின் உண்ணா விரத நாடகம் முடிந்ததன் பின்னரே தமிழகத்திற்கும் உலகத்திற்கும் உண்மை தெரிந்தது.

கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க அரசு காங்கிரஸ் அரசுடன் கூட்டுச் சேர்ந்ததால் வந்த வினை இதுவாயினும் அது தமிழினத்தின் அழிவுக்கு வழி வகுத்து விட்டது.

நிலை இவ்வாறு இருக்கையில் தமிழக மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருப்பதுடன் ஈழத்து மீனவர்களின் கடல் வளம் மற்றும் பௌதீக வளம் அழிவடைந்தும் வருகிறது.

கடந்த வாரம் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிகளைக் கட்டுப்படுத்தக் கோரி வடக்கு மீனவர்கள் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

ஆயினும் தி.மு.க அரசு தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியை தடுக்க நடவடிக்கை எடுப்பதை விடுத்து, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் தமிழக மீனவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துவருகிறது.

இவ்வாறான நிலையில் கடந்த வியாழக்கிழமை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை, தமிழக முதல்வர் மு.க ஸ்டாலினைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செ.கஜேந்திரன், சுகாஸ் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், காண்டீபன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கையில் உருவாகவுள்ள புதிய அரசியலமைப்பில் ஈழத் தமிழருக்கு நிரந்தர தீர்வை வழங்கும் வகையில் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க இந்திய மத்திய அரசை கோரும்படியாக அவர்களின் சந்திப்பு அமைத்திருந்ததுடன் அத்துமீறிய இந்திய மீன்பிடி தொடர்பிலும் கலந்துரையாடியிருந்தனர்.

தமிழினத்தின் அழிவுக்குக் காரணமாக இருந்தது தி.முக. அரசு. அது நினைத்திருந்தால் தமிழினம் இவ்வளவு இன்னல்களைப் பட்டிருக்காது.

அதைச் செய்யத் தவறிய தி.முக. அரசு, அத்துமீறும் இந்திய மீனவர்கள் தொடர்பில் இம்மியும் சிந்திக்காத தி.மு.க அரசு: ஈழத் தமிழினத்தின் அரசியல் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்குமா? என்ற கேள்வியை இவ்விடத்தில் கேட்பது காலத்தின் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** நாட்டில பெய்த கடும் மழை காரணமாக பல்வேறு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இதில் வட பகுதியைப் பொறுத்தவரை புதிதாக நிர்மாணிக்கப்பட்ட காபற் வீதிகளின் இரு பக்கத்து ஓரங்களிலும் உள்ள மண்கள் கரைந்து போயிருக்குது.

இதன் காரணமாக காபற் வீதிகளின் ஓரங்கள் உடைந்து போகக் கூடிய வாய்ப்புக்கள் நிறையவே உண்டு.

அவ்வாறு வீதிகளின் விளிம்புகள் உடையுமாயின், பிறகென்ன முழு வீதியும் சேதமடைவது சாத்தியமாகும் தானே.

**கங்காணி:-** விதானையார் சொல்லுறது நூறுவீதம் உண்மை.


முன்பெல்லாம் ஊர்களில கடகம் இழைத்தால் கூட, அதற்கு முதல் செய்யிற வேலை மட்டை கட்டுவது.

அதாவது காய்ந்த பனை மட்டையை வெட்டி எடுத்து கடகத்தின் விளிம்பில இறுக்கமாகக் கட்டிவிட, அந்தக் கடகம் நீண்ட காலம் பயன் தருவதாக இருக்கும்.

அதுபோலத்தான் வீதிகளின்ர இரு பக்க விளிம்புகள் உடையுமாயின், அந்த வீதியின்ர பயன்தரு காலம் மிகக் குறுகியதாகிவிடும்.

**சாத்திரியார்:-** மழை வெள்ளத்தில காபற் வீதிகளின்ர மண் அணைப்புகள் கரைந்து ஓடியதால காபற் வீதிகள் சேதமடையப் போவதாக நாங்கள் கதைக்கிறம்.

ஏன் எங்கட காபற் வீதிகளின்ர நிலத்தடியில அமைக்கப்பட்ட தண்ணீர் குழாய்கள் வெடிப்பெடுத்து அந்தத் தண்ணீர் வீதி வழியோடி, அட்டம் அயல் எல்லாம் எட்டிப் பார்த்து, தனக்கு விருப்பமான இடத்தில தங்கிக் கொள்ளுது.



## தனியார் கல்வி நிறுவனங்கள் முன் காத்துக்கிடக்கும் மனித வளம் காண்மினே!

இதன் காரணமாக காபற் வீதிகளுக்கு சத்திரசிகிச்சை நடந்து வீதியெங்கும் வெட்டுக் காயம். அதிலும் குறிப்பாக, யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்தியில் இருந்து திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தி வரையான பலாலி வீதியில தண்ணீர்க் குழாய் வெடித்ததால காபற் வீதி வெட்டப்பட்டு சத்திர சிகிச்சை செய்யப்பட்டிருக்குது.

அதேநேரம் வெட்டப்பட்ட இடம் சரியான முறையில திருத்தம் செய்யாமையால், அந்த இடம் புட்டி பள்ளமாக இருக்கிறது.

அதோட, சல்லிக் கல்லுகளும் அந்த இடத்தில சிதறிக்கிடப்பதால, அந்த வீதியால பயணிப்பவர்கள் குறித்த இடத்தைத் தவிர்ப்பதற்காகத் திடீரென வாகனத்தை வெட்டி எடுத்து ஓட, அதால விபத்துக்கள் நடக்கிற வாய்ப்புக்களும் ஏற்படுகிறது.

என்ன செய்யிறது. அருமந்த காபற் வீதி வெட்டப்பட்டு பத்துப் போடப்படுகின்ற அவலத்திற்கு ஆளாகியிருப்பது கண்டு மனம் வேதனையடைகிறது.

**வாத்தியார்:-** காபற் வீதியில யார் கைவைக்கிறதா இருந்தாலும் அதனை உரியவாறு திருத்தம் செய்ய வேணும்.

இது தொடர்பில சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இறுக்கமாக இருக்க வேணும் எண்டொரு தீர்மானத்தை ஆலடியில் எடுப்பம் எனக் கூற, அந்தத் தீர்மானம் அங்கு ஏக மனதாக நிறைவேறியது.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க மூப்பர் குரல் கொடுத்தார்.

**மூப்பர்:-** பொதுவில பல விடயங்களில எங்கட அரச அமைப்புக்களும் உள்ளூராட்சி அமைப்புகளும் கவனம் செலுத்தவும் நடவடிக்கை எடுக்கவும் வேண்டியிருக்குது.

உதாரணத்திற்கு யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில இருந்து யாழ். புகையிரத நிலையத்திற்குச் செல்கின்ற ஸ்ரேசன் ஒழுங்கையால அனைத்து வாகனங்களும் போய் வருவதால அந்தச் சிறிய ஒழுங்கையில அடிக்கடி வாகன நெருக்கடி ஏற்படுகிறது.

இதால புகையிரத நிலையத்திற்கு அவசர அவசரமாக வருகின்றவர்கள் எதுவும் செய்ய முடியாமல் திண்டாடுகினம்.

எனவே குறித்த ஸ்ரேசன் ஒழுங்கையை வடி வாகனம் உள்ளிட்ட வாகனங்களுக்கு ஒரு வழிப் பாதையாக அறிவிக்க வேணும். அதைச் செய்யும் போது, அந்த ஒழுங்கையில ஏற்படுகிற வாகன நெருக்கடியை கணிசமாகத் தவிர்க்க முடியும்.

**சிறாப்பர்:-** மூப்பர் சொல்லத் தான் ஞாபகம் வருகுது. பொதுவில நாங்கள் நேர முகாமைத்துவத்தைக் கடைப்பிடிப்பது மிகவும் குறைவு எண்டு தான் சொல்ல வேணும்.

அதிலும் தனியார் கல்வி நிறுவனங்கள் நேர முகாமைத்துவத்தைப் பின்பற்றத் தவறுவதால எவ்வளவோ மனித வளம் வீதியில் காத்து நிற்கிறது.

**கங்காணி:-** என்ன சிறாப்பர் சொல்லுறியள். சொல்வதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

**சிறாப்பர்:-** பொதுவில எங்கட பகுதிகளில இயங்குகிற பெரும்பாலான தனியார் கல்வி நிறுவனங்கள் தாம் அறிவித்த நேரத்தில வகுப்புக்களை நிறைவு செய்வதில்லை.

இதால பெற்றோர்கள் வீதி ஓரங்களில வாகனங்களை நிறுத்திவிட்டு, அரை மணித்தியாலம்- முக்கால் மணித்தியாலம் எனக் கால் கடுக்கக் காத்திருக்க வேண்டியுள்ளது.

அதிலும் காத்து நிற்கும் பெற்றோர்களில் பலர் பொறுப்பான பதவிகளில இருப்பவர்கள். இவ்வாறு பொறுப்பான பதவிகளில இருப்பவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு முன்னால காத்திருப்பதால, எங்கட பிரதேச நிர்வாகம் பாதிப்படைகிறது.

எனவே அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களும் தாம் அறிவிக்கின்ற சரியான நேரத்தில் வகுப்புக்களை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேணும்.அது எங்கட நேர முகாமைத்துவத்திற்கு மிகவும் அவசியம் எனக் கூற,

அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாசர் பதில்கள்

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS, WhatsApp செய்யுங்கள்



**தமிழ்த் தேசியப் பேரவை தமிழக முதல்வரைச் சந்தித்ததனால் தமிழினத்துக்கு ஏதும் விமோசனம் கிட்டுமா வியாசரே?**

முருகன்-சித்தன்கேணி

தமிழகம் ஈழத்துடன் கொண்டுள்ள உறவு மிகப்பலமானது. உணர்வு ரீதியானது. ஆயினும் தமிழினத்தின் பிரச்சினை தி.மு.க அரசால் தீரும் என நாம் நினைத்தால் நம்மைப்போல முட்டாள்கள் வேறு யாரும் இல்லை என்பது தான் உண்மை.

இந்திய மத்திய அரசான காங்கிரஸ் அரசுடன் ஒன்று சேர்ந்து விடுதலைப்புலிகளை அழிக்கும் செயற்றிட்டத்தை அரங்கேற்றியது தி.மு.க.

இப்போது சொல்லுங்கள் ஏதும் விமோசனம் கிடைக்குமா என்ன?


**ஒருவருக்கு பிடித்தது மற்றவருக்கும் பிடிக்க வேண்டும் என்று திணிப்பதற்கு பெயர் அன்பா?**

சாந்தன்-வட்டக்கச்சி

எம்மிடம் இருக்கும் பிரச்சினையே இது தான். எமக்குப் பிடித்து விட்டது என்பதற்காக அது மற்றவருக்கும் பிடிக்க வேண்டும் என்று நினைப்பது எவ்வளவு முட்டாள்தனமானது.

பிடித்தல் என்பது மனம் சார்ந்தது. அதை அடுத்தவர் திணிக்க நினைத்தால் அது ஒரு நாளும் ஆத்மார்த்தமான பிடிப்பாக இருக்காது.

சுருங்கச் சொன்னால் பச்சை மண்ணையும் சுட்ட மண்ணையும் ஒட்ட வைக்கும் செயலுக்கு ஒப்பானதே இந்தத் திணித்தல்.



"கார்த்திகைப்பிறையைகரடிகாண்பதுபோல" என்பதன் அர்த்தம் என்ன வியாசரே?

**மலையக மக்களை வடக்குக் கிழக்கில் குடியேறும்படி கேட்பது சரியானதா?**

ராசதுறை-பருத்தித்துறை

அவர்களை நாம் மலையகத் தமிழர் என்று பிரித்து அழைப்பதே, அறமற்ற சொல்.

பிறப்பால், மொழியால் மதத்தால், பண்பாடு, கலாசாரத்தால், மண்மீது கொண்ட பேரன்பால் அவர்களும் நாமும் ஒன்றிணைந்தவர்கள்.

அவர்களை தமிழர் என்று அழைப்பதே சிறந்தது. பிறகேன் மலையகம் எனும் அடைமொழி.

அவர்கள் தாய் மண்ணை விட்டு விட்டு வர மாட்டார்கள் என்பது தெரியும். ஆயினும் அவர்களை நாம் அழைப்பது அன்பின், அக்கறையின் நிமிர்த்தம்.

அந்த ஒன்றே எம்மையும் அவர்களையும் இதயத்தால் ஒன்றிணைத்து விடுகிறது.

**வியாசருக்கு ஒரு சம்பந்தம் பார்க்கலாம் என நினைக்கின்றேன். ஒரு நல்ல புகைப்படத்தை தரமுடியுமா வியாசரே?**

ரதிகேஸ்-மாமுனை

பல்லிருக்கும் போது எவரும் பகோடாத் தரமாட்டார்கள்.

எமக்குப் பல்வீழ்ந்து விட்டதுதான் தாமதம் எமக்கு முன்னாலேயே பகோடாவை வாங்கி கறுக்கு முறுக்கு என்று கடித்து தின்று எமக்கு வெறுப்பேற்றுவார்கள்.

தம்பி ரதிகேஸ் நீங்கள் கேட்கும் கேள்வியும் இதே போலத்தான்.

முடி நரைச்சுப் போச்சு, பல்லு விழுந்து போச்சு, தோல் சுருங்கிப் போச்சு, காது அடைச்சுப் போச்சு, கண் கலங்கிப் போச்சு, கை நடுங்கிப் போச்சு இனி நான் என்னத்தை சொல்லத் தம்பி.

**தர்மம் தலைகாக்கும் என்றால் தமிழினம் செய்த தர்மம் ஏன் தமிழினத்தின் தலையைக் காக்கவில்லை வியாசரே?**

பிந்துதன்-வரணி

தமிழினம் தர்மம் செய்த இனம் என்று சொல்லுவதை ஏற்க முடியவில்லையோ என்கிறது தமிழினத்தின் தற்போதைய நிலை.

ஆம், தமிழினம் முற்பிறப்பில் செய்த பாவத்திற்கு இப்போது அனுபவிக்கிறது என்பதே மெய்போல இருக்கிறது.

இல்லாவிடின் வன்னிப் பெருநிலப்பரப்பில் கொத்துக் குண்டுக்கு இரையாகியிருக்குமா தமிழினம்?

ஆயினும் ஒன்றுமட்டும் உறுதி. எமக்கு இன்னல் இழைத்தவர்கள் அடுத்த பிறவியில் அதற்கான பலனை அனுபவித்தே தீருவர். இது சர்வ நிச்சயம்.

**தமிழினப் படுகொலைக்கு துணை நின்ற தி.மு.கவிடம் தமிழர் பிரச்சினைக்கு அழுத்தம் கொடுங்கள் என்பது முறையா வியாசரே?**

சுதன்-குப்பிழான்

2009 ஆம் ஆண்டு. இறுதி யுத்தம் உச்சம் பெற்றிருந்த நேரம்.

அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி வன்னிப் பெருநிலப்பரப்பில் நடக்கும் போரை உடன் நிறுத்த வேண்டும் என மெரினா பீச்சில் சில மணிநேரம் உண்ணா நோன்பிருந்தார்.

போர்நிறுத்தத்திற்கு இலங்கை அரசு சம்மதித்து விட்டது. போர் நிறுத்தப்பட்டது என அறிவித்து தனது உண்ணாநோன்பை நிறைவு செய்தார்.

விடயம் என்னவென்றால் அவ்வாறு அறிவித்த அடுத்த சில மணிநேரத்திலேயே அதிகமான அப்பாவித் தமிழினம் கொத்துக் கொத்தாய்க் கொல்லப்பட்டது.

**அடிக்கு மருந்து அடியென்றால் கடிக்கு மருந்து கடியா வியாசரே?**

எ.கே.எஸ்-யாழ்ப்பாணம்

அப்படியில்லையே. சில இடங்களில் அடிக்கு மருந்து கடியாகவும் இருக்கும்.

ஆம், நீங்கள் நாய்க்கு அடித்துப் பாருங்கள். அது உங்களை அடிக்கிறதா? கடிக்கிறதா? என்பது அப்போது தெரியும்.

எதற்கும் A.R.V ஐ தயாராக வைத்திருப்பது நல்லது தம்பி.


**'கார்த்திகைப் பிறையை கரடி காண்பது போல'' என்பதன் அர்த்தம் என்ன வியாசரே?**

மகாலட்சுமி - உரும்பிராய்

மிகவும் அரிதான, மகிழ்வான விடயம் ஏதும் நடந்தால் அச்சந்தர்ப்பத்தில் மேற்குறித்த பழமொழி கூறப்படுகிறது.

உதாரணமாக ஒரு நண்பரை நீண்ட நாட்களாகக் காணவில்லை. திடீரென அவர் வந்தால் கார்த்திகைப் பிறையை கரடி காண்பது போல என்று கூறுவார்கள்.

குறித்த பழிமொழி தமிழர் மத்தியில் வழக்கொழிந்து விட்டதாயினும் இதை நினைவூட்டிய மகாலட்சுமிக்கு மிக்க நன்றிகள்.



மலையக மக்களை வடக்குக் கிழக்கில் குடியேறும்படி கேட்பது சரியானதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாளக் குழுக்களினால் போதைக்குள் திணிக்கப்படும் இலங்கை





ம.பிரான்சிஸ்க்
சுதந்திர
பத்திரிகையாளர்

இலங்கையின் பிரபல பாதாளத் தாதாக்களில் ஒருவரும், 19 கொலை வழக்குகளுடன் தொடர்புடைய வருமான கணேமுல்ல சஞ்சீவ, புதுக்கடை நீதிமன்றத்தில் கடந்த மாசி 19 அன்று சட்டத்தரணி வேடத்தில் வந்த ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டமை எமக்குத் தெரியும். சமிது தில்சான் என்ற இந்தத் துப்பாக்கிதாரியும் இஷாரா செவ்வந்தியும் குற்றவியல்களின் ஒழுக்கக் கோவைச் செயன்முறைச் சட்டப் புத்தகத்திற்குள் (Code of Criminal Procedure) துளைப் போட்டு துப்பாக்கியை மறைத்து மிகத் தந்திரமான முறையில் நீதிமன்றத்தின் வளாகத்திற்குள் வந்து இந்தக் கொலையினை செய்திருக்கின்றனர். இந்தக் கொலையினுடைய பங்குதாரர்களாக இவர்களுடன் பலர் சம்மந்தப்பட்டது நாம் அறிந்ததே. சமிது தில்சானைச் செவ்வந்தி வழி நடத்த, செவ்வந்திக்குக் ஹெகல் பத்திர பத்மே மூளையாய் இருந்தார். ஹெகல் பத்திர பத்மே, பக்கோசமன், பாணந்துர நிலங்க, தெம்பிலி லகிரு, குடு சலிந்த போன்றோர் இந்தோனேசியாவிலும் அதேபோல் இஷாரா செவ்வந்தி, கம்பஹா பபா, நுகேகொட பவி, ஜே.கே பாய், ஜப்னா சுரேஸ், செவ்வந்தி டம்மி, நந்தக்குமார் ஆகியோர் நேபாளத்திலும் கைதாகி, அழைத்துவரப்பட்ட பின்னர், விசாரணைகள் வேகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

செவ்வந்தியைச் சட்டத்தரணி என்று நினைத்து, ஒரு பெண் வந்து தன்னுடைய வழக்கை ஒப்படைக்க முன் வந்ததாகவும், அவர் வேறொரு சட்டத்தரணியை கை காட்டியதாகவும் பலதரப்பட்ட பாட்டிக் கதைகள் ஊடகங்களில் பரப்பப்பட்டன. எது எப்படியோ, செவ்வந்தியின் சட்டத்தரணிக் கதாபாத்திரம் சறுக்காமல் பொருந்தியிருக்கிறது. ஒரு குற்றத்தைச் செய்யப் போகிறோம் என்ற எந்தவித பதற்றமும் இல்லாமல் அவருக்கு இத்தனை தந்துரோபாயமாகக் கறுப்புக் கோட்டணிந்து நடிக்க ஒரு சட்டத்தரணியால் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார். செவ்வந்திக்கும் சமிது தில்சான் என்ற சூட்டருக்கும் வாகனத்தில் செல்லும்போது தடங்கல் இல்லாமல் செல்ல சட்டத்தரணி அனுமதிப்பத்திரம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரச்சினை இல்லாமல் நீதிமன்றத்திற்குள் வந்து கொலையை அரங்கேற்றிவிட்டுச் செல்ல சட்டத்தரணி அடையாள அட்டை செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் சட்டத்தரணிகளுக்கே உரிய இரு கழுத்துப்பட்டிகளையும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் இந்த நாசகாரத்தின் ஆணிவேராக இருந்த 55 வயதான கடவத்தையைச் சேர்ந்த ஒரு பெண் சட்டத்தரணி கைது செய்யப்பட்டிருக்கிறார். அது மட்டுமல்ல செவ்வந்திக்கு குற்றவியல்களின் ஒழுக்கக்கோவை செயன்முறைச் சட்டப் புத்தகத்தையும் இரண்டை இந்தச் சட்டத்தரணிதான் வழங்கியிருக்கிறார். எதற்கு இரண்டு புத்தகங்களை வழங்கினார் என்று தெரியவில்லை. ஆனால் இருப்பதிலேயே தனக்குப் பாதுகாப்பான புத்தகத்தை செவ்வந்தியே தேர்வு செய்து கொள்ளட்டும் என்று அந்த இரண்டு புத்தகங்களையும் வழங்கியிருக்கக்கூடும். விசாரணைகள்தான் இதனுடைய பின்னணியையும் உண்மையையும் வெளிப்படுத்த வேண்டும்.

சட்டத்தரணியருடைய பாதாள தொடர்புகள் இப்படி இருக்க இன்னுமொரு மிகச் சுவாரசியமான செய்தி அடிபட்டுக் கொண்டிருக்கின்றன. பொலிஸ் தலைமையகத்தில் பணியாற்றும் சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் மிகக் கூருணர்வான, இரகசியமான பொலிஸ் நடவடிக்கைகளை எல்லாம் வலையொளி ஒருவருக்கு வழங்கி இருப்பதாகவும் தகவல்கள் வந்த வண்ணம் உள்ளன.

மேலும் பொலிஸ்மா அதிபர் பிரியந்த விஜயசூரியவிற்கு எதிராக அவதூறு பரப்ப முன்னின்று செயற்பட்டதற்கும் எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பொலிஸ்மா அதிபர் பிரியந்த விஜயசூரிய பொலிஸ் கமிசனிடமும் சி.ஐ.டியிடமும் இந்த சிரேஸ்ட டி.ஐ.ஜிக்கு எதிராக முறைப்பாடு செய்திருக்கிறார். அதிகாரியை இடமாற்றம் செய்து உரிய விசாரணை மேற்கொள்ளுமாறு கோரியிருக்கிறார். இதேவேளை வலையொளியாளருக்கும் சிரேஸ்ட டி.ஐ.ஜிக்கும் இடையில் நடக்கும் தொலைபேசி உரையாடல்களும் சமூக ஊடகங்களில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன. குருநாகல் பகுதியைச் சேர்ந்த வலையொளியாளரிடம் சி.ஐ.டி வாக்குமூலங்களை எடுத்திருக்கிறது. இந்த நிலையில் சிரேஸ்ட டி.ஐ.ஜியிடம் முறையான விசாரணைகளை தொடர இருக்கிறது.

இதேபோல ஒன்றுதான் பாதாள உலக பேர்வழி ஒருவருக்கு ஆயுதம் கொடுத்த விவகாரம். ஜப்னா என்று அழைக்கப்படும் பாதாள உலக அடியாள் ஒருவர் கடந்த ஐப்பசி 17ஆம் திகதி விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு களுத்துறை தெற்குப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். ஜப்னாவின் படுக்கையறையில் ஒழித்து வைக்கப்பட்டு இருந்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டு துப்பாக்கிகள், தோட்டாக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலதிக விசாரணைகளின்போது அவர் அளித்த வாக்குமூலம் அதிர்ச்சியையும் அவமானத்தையும் ஏற்படுத்தியது. களுத்துறைத் தெற்குப் பொலிஸ் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி ஒருவர் வழங்கிய ஆயுதங்கள்தான் இவை என்றார் ஜப்னா. இந்த முன்னாள் பொறுப்பதிகாரியுடன் உமக்கு என்ன தொடர்பு என்று கேட்டு அவருடைய கைத்தொலைபேசியைச் சோதனை செய்த போது நம்பவே முடியாத அதிர்ச்சி காத்திருந்தது. வெறுமனவே ஒரு பாதாள அடியாளான ஜப்னாவுடன் சேர்ந்து கொண்டு இந்த பொறுப்பதிகாரி உண்டு, குடித்து, மகிழ்ந்து மது மயக்கத்தில் இருக்கும் விதம் விதமான புகைப்படங்கள் தொலைபேசியில் நிறைத்திருந்தன. இது தொடர்பாக இப்போது விசாரணைகள் நடந்து வருகின்றன.

இங்கு வேடிக்கையை நாம் நோக்கினால் ஒரு பொலிஸ் அதிகாரி தன்னுடைய நண்பரான நிழல் உலக தாதாவுக்குத் துப்பாக்கி வைக்கும் களஞ்சியத்திலிருந்து துப்பாக்கிகளை எடுத்துக் கொடுக்கிறார், ஒரு சட்டத்தரணி பாதாள ஜோடி ஒன்றை ஹொலிவூட் படம் ஒன்றிற்குத் தயார் செய்வதுபோல சட்டத்தரணி வேடம் அணிவித்து ஒப்பனை செய்து சட்டப் புத்தகத்தையும் வழங்கி அச்சமூட்டுகிறார். இராணுவ முகாமொன்றில் இருந்த 73 ரீ-56 துப்பாக்கிகளில் 35 துப்பாக்கிகள் மாயமாகியிருக்கின்றன. கொமாண்டோ ஒருவன் ஓர் இலட்சம் தோட்டாக்களை பாதாள உலகத்துக்கு வழங்க பேரம் பேசுகிறார். பெயர்போன கிரிமினல் ஒருவருக்கு புறக்கோட்டையில் இருக்கும் புத்தகம் விற்பனை செய்யும் ஒருவருடைய கை விரல் அடையாளத்தை வைத்து மூன்று பாஸ்போட்டுகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

2008ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட கார் ஒன்று 2003ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதெல்லாம் உணர்த்துவது என்ன? பாதாள உலகத்தில் இருப்பவர்கள் எல்லாம் வெறும் முட்டாள் கூட்டம் கிடையாது. இவர்களில் பெருமளவானவர்கள் கல்வியில் சாதாரணதரம்கூட சித்தி அடையாதவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு பாராளுமன்றத்தில் ஆட்கள் இருக்கிறார்கள். நீதிமன்றத்தில் ஆட்கள் இருக்கிறார்கள். பொலிஸில், இராணுவத்தில், சிறைச்சாலையில், போதைப்பொருள் தடுப்புப் பிரிவில், இமிக்ரேசனில், மோட்டார் வாகனப் பதிவு திணைக்களத்தில் என்று செல்வாக்கான நபர்கள் இருக்கிறார்கள். இவர்களும் ஒரு பாதாள அரசை நிறுவி இருக்கிறார்கள். இந்தப் பாதாள அரசானது நிஜ அரசைவிட வேகமாக இத்தனை காலமும் இயங்கியது. இப்போது நிஜ அரசு இவர்களுக்கு எதிராகப் போர் தொடுக்கப்போக இந்தக் கறுப்பு பொறிமுறை தாறுமாறாய் சிதறுண்டு போயிருக்கிறது. ஆனால் இன்னமும் முழுமையாய் ஒழிக்கப்படவில்லை. அப்படி ஒழிக்க முற்படும்போதுதான் எண்ணற்ற பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இதனால்தான் தோல்வி அடைந்த ஒரு கும்பல் நவம்பர் மாதம் 21ஆம் திகதி நிகழ்வை அரங்கேற்றியிருந்தது. கடந்த காலங்களில் நாட்டில் எங்கே அதிகம் போதைப் பொருள் பிடிபட்டன என்றும் எந்தக் கட்சியின் உறுப்பினர்களின் பெயர்கள் இதில் அதிகம் பேசப்பட்டன என்றும் எல்லோருக்கும் தெரியும். அவர்கள்மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாகி பதற்றத்தில் இருக்கிறார்கள். இப்படியே இந்தப் போதை மற்றும் பாதாள மாப்பியாவுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து மொத்த தேசமும் துப்பரவானால், தம் அரசியல் இருப்பு நாறிப் போய்விடும் என்று அஞ்சுகிறார்கள். இதனால்தான் இத்தனை நாட்களாய் மூர்ச்சையாகியிருந்த இனவாதிகளும்கூட மெல்ல மெல்ல தலையெடுக்கப் பார்க்கிறார்கள். ஞானசாரதேரர், ஊடக சந்திப்பு என்ற பெயரில் பழையபடி வதந்தி பரப்பத் தொடங்கியிருக்கிறார். இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவர் ரங்கத் திசானாயக்கவை எப்போது பார்த்தாலும் கடிந்து கொள்கிறார்கள். வாய்க்கும் மூளைக்கும் சம்மந்தமில்லாமல் பேசுவதில் விற்பன்னராக இருக்கும் உதய கம்பன்பில தன்னை கைது செய்யக்கூடும் என்று அஞ்சி பாங்கொக்கில் போய் ஒழிந்துவிட்டு வந்து எந்தவித மனச்சாட்சியும் இல்லாமல் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் மீது தாக்குதல் தொடுத்து அதில் பணியாற்றக்கூடிய நேர்மை மிகு அதிகாரிகளிடத்தில் ஒருவித அழுத்தத்தை பிரையோகிக்கின்றார். விமல் வீரவன்ச இலங்கையினுடைய பொருளாதார விளிம்பில் அரும் தொண்டாற்றிய மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க மீது சொத்துக் குவிப்புக் குற்றச்சாட்டை முன்வைக்கிறார்.. இதே விமல் வீரவன்சவிற்கு எதிராகச் சொத்துக் குவிப்பு வழக்கு நடந்துகொண்டிருக்கும் நிலையில்தான் நந்தலால் மீது இவர் பழிபோடுகின்றார். எப்போதும் இனவாத மாயைக்குள் நாட்டைத் தள்ளி கற்பனைக் கதைகள் சொல்லி வாழும் விமல் வீரவன்சவின் வரலாற்றை நாம் அறிவோம்.

பாதாளக் கும்பலின் குருநாதர்கள் போதை வலையமைப்புக்களை வழிநடத்தக்கூடிய சர்வதேச - சுதேச தாதாக்கள் இலங்கை, போதையற்ற குற்றச்செயல்கள் அற்ற சுபிட்ஷம் நிறைந்த நாடாக மாறுவதற்கு ஒருபோதும் விடப்போவதில்லை. அவர்களுக்கு இந்த நாடு சுடுகாடாய்ப் போனாலும் பரவாயில்லை. தங்களுடைய போதைப் பாதாளச் சாம்ராஜ்ஜியம் தளைக்க வேண்டும் என்றே எப்போதும் விரும்புவார்கள். இதனால் இந்த நாட்டில் மறுமலர்சிக்கு எதிராக பொறிமுறை மாற்றத்திற்கு எப்போதும் நிரந்தர முட்டுக்கட்டையாக இருக்கப் போகிறார்கள். இதனால்தான் குற்ற நிழல் படிந்த தங்களுடைய சட்டவிரோதப் பணத்தைப் பயன்படுத்தி என்ன விலை கொடுத்தாகிலும் இதை நிர்மூலமாக்க முயல்வார்கள். ஆகவே இனவாதத்தையும் மதவாதத்தையும் பொய்யான பரப்புரைகளையும் கையில் எடுத்து தாராளமாய் வளங்களைச் செலவு செய்தாகிலும் தமக்குத் தோதான ஓர் ஆட்சியைக் கொண்டு வருவதற்கு அவர்கள் என்றும் பின் நிற்கப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன் சீனா ஓய்வு; ஒரு சகாப்தத்தின் முடிவு!



ஒருபோதும் விட்டுக்கொடுக்காத "Never Give Up" என்ற தாரக மந்திரத்தின் நாயகனும், "90ஸ் கிட்ஸின்" ஹீரோவுமான WWE ஜாம்பவான் ஜோன் சீனா மல்யுத்தப் போட்டிகளில் இருந்து அதிகாரபூர்வமாக ஓய்வு பெற்றுள்ளார்!

சுமார் 23 ஆண்டுகள் நீடித்த அவரது புகழ்பெற்ற மல்யுத்தப் பயணத்திற்கு டிசம்பர் 13 சனிக்கிழமை நடைபெற்ற "Saturday Night's Main Event" தொடர் இறுதி ஆட்டம் முற்றுப்புள்ளி வைத்தது.

**அதிர்ச்சி முடிவு :**

தனது கடைசிப் போட்டியில், ஐரோப்பிய சாம்பியனான குந்தரை எதிர்கொண்ட ஜோன் சீனா, குந்தரின் ஸ்லீப்பர் ஹோல்டில் எதிர்பாராத விதமாக Tap Out (சமர்ப்பிப்பு) முறையில் தோல்வியைத் தழுவினார்.

சுமார் 20 ஆண்டுகளில் ஜோன் சீனா "Tap Out" ஆவது இதுவே முதல் முறை என்ற அதிர்ச்சியூட்டும் தகவலுடன், அவரது மல்யுத்தப் பயணம் நிறைவடைந்தது.

**சாதனை நாயகன் :**

மல்யுத்த வரலாற்றில் அதிகபட்சமாக 17 முறை உலக சம்பியன்ஷிப் பட்டம் வென்ற வீரர் என்ற சாதனையைப் படைத்தவர் ஜோன் சீனா.


**நெகிழ்ச்சியான தருணங்கள் :**

இறுதிப் போட்டிக்குப் பிறகு, அரங்கில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் "Thank You Cena" எனக் கோஷமிட்டு அவருக்கு நெகிழ்ச்சியுடன் பிரியாவிடை அளித்தனர்.

களத்தில் தன் காலணிகளையும் மணிக்கட்டுக் கவசங்களையும் கழற்றிவிட்டு, WWE ரிங்கை முத்தமிட்டு பிரியாவிடை அளித்த ஜோன் சீனாவுக்கு, சக வீரர்கள் மற்றும் ஹொலிவுட் நட்சத்திரங்கள் பலரும் வாழ்த்துத் தெரிவித்தனர்.

மல்யுத்தத்தில் இருந்து ஓய்வு பெற்றாலும், அவர் அடுத்த 5 ஆண்டுகளுக்கு WWE அமைப்பின் தூதுவராகவும் மற்றும் இளம் வீரர்களுக்கு வழிகாட்டியாகவும் தொடர்ந்து செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது

இனி ஜோன் சீனாவின் முழுக்கவனத்தையும் ஹொலிவுட் சினிமாத் துறையில் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.





# ஆச்சி — அறிவுரை

## பெரியவர்களைக் கனம் பண்ணாத சமூகம்; ஒரு மூதாட்டிக்கு நடந்த கொடூரம்

**பேராண்டி...**

எங்கட இளம் பிள்ளைகளிட்டை மனிதாபிமானம் இம்மிக்கும் இல்லாத நிலை வந்திட்டுது. பெரியவர்களைக் கனம் பண்ணுற பழக்கம் அநேகமானவர்களிட்ட நடக்காத காரியமாகிட்டுது.

யார் எதைச் சொன்னாலும், பெரும்பான்மை சிங்கள மக்களிட்டை: பெரியவர்களைக் கனம் பண்ணுற செயல் உணர்வுபூர்வமாக இருக்குது எண்டுறத இந்த இடத்தில சொல்லித்தான் ஆகவேணும்.

பேராண்டி! போன கிழமை கே.கே.எஸ் வீதியிலை இருக்கிற ஒரு தனியார் வைத்தியசாலைக்குப் போயிருந்தனான். அங்க மற்ற இடங்களைவிட மருந்துகள் விலை குறைவெண்டுறதால கனக்கச் சனம் அங்க போறவை. நல்ல வைத்திய சேவை செய்யினம். இல்லையெண்டு சொல்லக்கூடாது.

ஆனாலும் அண்டைக்கு அவை ஒரு மூதாட்டிட்டை நடந்து கொண்ட விதம் மனசுக்குக் கஷ்டமா இருந்தது பேராண்டி.

ஓம், காய்ச்சலுக்கு மருந்தெடுக்க 75 மதிக்கத்தக்க மூதாட்டி ஒருதர் வந்திருந்தார். அந்த மூதாட்டி சரியா மெலிஞ்சு நோய்வாய்ப்பட்டிருந்தார். நடக்குறதுக்கு கஷ்டப்பட்டுத்தான் வைத்தியரின்ர அறைக்குள்ள போனவர்.

வைத்தியர் சோதிச்சு முடிஞ்சு, வெளிய வந்து வைத்தியர் எழுதிக் குடுத்த மருந்துகளை வாங்கிக் கொண்டுவர கௌன்டரில இருந்த பிள்ளை 1600 ரூபா தாங்கோ அம்மா எண்டுது.

என்னட்டை ஐந்நூறு ரூபாய்தான் இருக்குது பிள்ளை எண்டார் அந்த மூதாட்டி. இன்னும் ஒரு நூறு ரூபா இருக்குதோ எண்டு அந்தப் பிள்ளை கேட்க, இல்லை எண்டார் அந்த மூதாட்டி.

பாமசியிலை இருக்கிறவர் வந்து அந்த மூதாட்டிட்ட மருந்தைத் தாங்கோ எண்டு வாங்கிக் கொண்டு போயிட்டார். அவரிட்ட இருந்த ஐநூறு ரூபாயையும் வாங்கிப் போட்டினம். (அது வைத்தியரின்ர கட்டணம்) பாவம் அந்த மூதாட்டி அதை வாங்கிக் கொண்டு மருந்து தருவினம் எண்டு நம்பிக் கால் கடுக்க நிக்கிறா.

ஆனால் அவை தங்கட வேலை. எவ்வளவு கொடுமைத் தனம். ஈவிரக்கம் இல்லாத செயல். உள்ள இருக்கிற வைத்தியரோட கௌன்டர்ல இருக்கிறவர் கதைச்சிருந்தால்கூட பிரச்சினைக்குத் தீர்வு கிடைச்சிருக்கும்.

இந்தக் கொடுமையைக் கண்ட அதில நிண்ட தம்பி ஓராள் தன்னட்ட இருந்த காசைக் குடுத்து அவவின்ர மருந்தை வாங்கிக் குடுத்தார்.

இந்தளவுக்கும் அந்தப் பாமசியில இருந்தவர் தன்ர பிள்ளையையும் அந்த அறைக்குள்ள வைச்சிருந்திருக்கிறார்.

இந்தப் கொடுமையைப் பாக்கிற சின்னப் பிள்ளை நாளைக்கு எப்பிடி நடந்துகொள்ளும் எண்டு யோசிச்சிருந்தால் அந்த மூதாட்டிக்கு உதவி செய்திருப்பார் அவர்.

பேராண்டி, தமிழினத்திட்ட மனிச வாழ்க்கைக்குத் தேவையான முறைகளெல்லாம் இருந்துது. ஆனால் இப்ப இல்லை. அதுதான் தமிழினம் இந்தப் பாடுபடுகுது. இப்ப புரியுதோ பேராண்டி தமிழினத்துக்கு ஏன் கடவுள் ஒரு துண்டு நிலத்தைக்கூடக் குடுக்கேல்லையெண்டு.


**ஆச்சி வருவா...**

மாவை.நா.கஜேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புருவ லட்சணம்





பிருகு முனிவர் அருளிய அங்க லட்சண சாஸ்திரம் நம் புருவ அமைப்புகள் குறித்து சுவாரஸ்யமான தகவல்களை விவரிக்கிறது. புருவங்கள் இரண்டுக்கும் மத்தியில் உள்ள இடைவெளி. குறுகி நெருக்கமாக இருந்தால், அது நட்புறவுக்கான அடையாளம். இவர்களை நண்பர்களாகப் பெற்றவர்கள் அதிஷ்டசாலிகள்!

புருவங்களுக்கு இடையேயான இடைவெளி அதிகமாக இருந்தால், அத்தகைய அன்பர்கள் பொறியியல்துறை மற்றும் கலைத்துறையில் வல்லுநராகத் திகழ்வார்கள்.

பெண்களுக்குப் புருவங்களுக்கு இடையே இடைவெளி இல்லாமல் இருப்பது சுபலட்சணம். அவர்களின் வாழ்வில் நிறைந்த செளபாக்கியம் நிலவும். புருவ இடைவெளி அதிகம் இருப்பின், அரச போக வாழ்க்கை கிடைக்கும்.

புருவம் பிறை வடிவில் இருந்தால், மிக மென்மையான உணர்வு படைத்தவர்களாகவும், செல்வந்தர்களாகவும், கல்வியில் உயர் தகுதியைப் பெற்றவர்களாகவும் திகழ்வர்.

வில் போன்ற வளைந்த புருவம் பெண்களுக்கு இருந்தால், அவர்கள் அழகுணர்ச்சியும் அன்பும் கொண்டவர்களாகத் திகழ்வார்கள். குடும்பத்தாரிடம் பாசம் மிகுந்திருக்கும். ஓவியம், சிற்பக்கலைகளில் அதிக நாட்டம் இருக்கும்.



# அடுக்களைப் பக்கம்



- பலாப்பழத்தை வெட்டி சுளை எடுப்பதற்கு முன்னால் கையில் எண்ணெய் தடவிக் கொண்டால் அதில் உள்ள பால் கைகளில் ஒட்டிக்கொள்ளாமல் இருக்கும். வெட்டுவதற்கும் சௌகரியம்.
- பீன்ஸ் காய்ந்துவிட்டால் அதை வேகவைத்த பிறகுதான் உப்பு சேர்க்க வேண்டும். முன்பே சேர்த்தால் விரைவாக வேகாது.
- வடை தயார் செய்யும்போது மாவில் தண்ணீர் அதிகமாக இருந்தால் ஒரு டேபிள் ஸ்பூன் வெண்ணெய் சேர்க்கவும்.
- எந்த வகை குழம்பிலும் கடலை மாவை தனியாக கரைத்து, பின்னர் குழம்பில் சேர்த்தால் குழம்பு கெட்டியாகிவிடும்.
- மசாலா, குருமாக்களில் காரம் கூடுதலாகிவிட்டால் சிறிது தயிரை கடைந்து சேர்க்கவும் அல்லது தேங்காய்ப்பாலை விடவும்.
- வாணலியில் ஏதேனும் உணவுப் பதார்த்தங்களை வறுக்கும்போதோ அல்லது பொரிக்கும்போதோ எண்ணெய் பொங்குமானால், சிறிது புளியை எண்ணெயில் போட்டால் போதும், பொங்காது.
- கோதுமை மாவில் வண்டு பிடிக்காமல் இருப்பதற்கு அதில் சிறிதளவு உப்பை கலந்து வைத்தால் போதும்.







# மரவள்ளிக்கிழங்கு மசாலா தட்டை



## சமைப்போம் சுவைப்போம்

## தேவையானவை:





மரவள்ளிக்கிழங்கு – கால் கிலோ
பச்சரிசி மா – 300 கிராம்
பொடித்த பொட்டு கடலை மா – 100 கிராம்
மிளகாய்த்தூள் – ஒரு கரண்டி
கறிவேப்பிலை – 2 ஆர்க்கு
ஊறவைத்த பயத்தம் பருப்பு, கடலைப்பருப்பு (சேர்த்து) – 50 கிராம்
வேர்க்கடலை – 100 கிராம் (வறுத்துப் பொடிக்கவும்)
பூண்டு – 20 பல் (நசுக்கவும்)
இஞ்சித் துருவல் – 2 கரண்டி
வெண்ணெய் – 50 கிராம்
எண்ணெய் – அரை லீற்றர்
உப்பு – தேவைக்கேற்ப

## செய்முறை

பாத்திரத்தில் வேகவைத்து துருவிய மரவள்ளிக்கிழங்கு, பச்சரிசி மா, பொடித்த பொட்டுக் கடலை மா, மிளகாய்த்தூள், கறிவேப்பிலை, ஊறவைத்த பயத்தம் பருப்பு, கடலைப்பருப்பு, பொடித்த வேர்க்கடலை, நசுக்கிய பூண்டு, இஞ்சித் துருவல், உப்பு, வெண்ணெய் சேர்த்து சப்பாத்தி மா பதத்தில் பிசையவும். வாணலியில் எண்ணெய்விட்டு காய்ந்ததும் மாவை சிறு சிறு தட்டைகளாக தட்டிப்போட்டு பொரித்து எடுக்கவும்.

**இது மாலை நேர ஸ்நாக்ஸாகச் சாப்பிட மிகவும் நன்றாக இருக்கும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒரே துணை; ஒரேயொரு முட்டை; சடலங்களே உணவு...

Discovery CHANNEL

## பாறு கழுகுகளின் கதை!



"பாறு கழுகுகள் என்றால் என்ன பறவை" என்று கேட்பவர்களுக்கு புரிகிறபடி சொல்ல வேண்டுமென்றால், அவைதாம் "பிணம் தின்னி கழுகுகள்" ஆங்கிலத்தில் வல்ச்சர் (Vulture).

"ஆகாயத்தில் பாறு கழுகுகள் வட்டமிட்டுக்கொண்டிருந்தால், அங்கு புலியோ, சிங்கமோ அல்லது சிறுத்தையோ ஏதோ ஒரு விலங்கை வேட்டையாடியிருக்கிறது என்று அர்த்தம். அவை உண்டதுபோக மிச்சம் மீதி இருப்பதை பாறு கழுகுகள் உண்டு தீர்க்கும். சில மணி நேரத்தில், அந்த இடத்தில் ஒரு வேட்டை நடந்ததற்கான எந்த சுவடும் இல்லாதபடிக்கு மொத்தமாக தின்று தீர்த்துவிடும் பாறு கழுகுகள். எலும்புகளைக்கூட மிச்சம் வைக்காமல் சாப்பிடும்.


பாறு கழுகுகள் வேட்டையாடாது. இறந்த சடலங்களை மட்டுமே சாப்பிடும். எவ்வளவு அழுகிய சடலமாக இருந்தாலும் பாறுக்கள் சாப்பிட்டுவிடும். தொற்று நோய் வந்து இறந்த விலங்குகளின் சடலங்களைச் சாப்பிட்டாலும் பாறுக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

அந்தளவுக்கு, எத்தகைய நோய்க் கிருமிகளையும் செரிமானம் செய்வதற்கான அமிலங்கள் அவற்றின் வயிற்றில் சுரக்கின்றன. ரேபிஸ் வந்து இறந்த நாய்களின் சடலங்களை உண்டாலும் பாறுக்களுக்கு எந்தப் பிரச்சினையும் வராது.

ஒரு யானை வயதாகி இறந்துவிட்டால், அதன் உடல் மட்கி மறைய ஆறு மாதங்களாவது ஆகும்.

இதுவே, அந்த யானை இறந்த காட்டுக்குள் பாறு கழுகுகள் இருந்தால், ஐந்தே நாளில் யானையின் சடலம் இருந்த தடமே தெரியாத அளவுக்கு தின்று தீர்த்துவிடும்.

காட்டை சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும் வைத்துக்கொள்ளும். பாறு கழுகுகளே இல்லாத வனத்தில் ஒரு யானை இறந்தால், அதுவும் நதிகள் உற்பத்தியாகிற இடங்களில் இறந்து கிடந்தால், அந்த நதியில் இருக்கிற நீர் மூலம் சமவெளியில் வாழும் மனிதர்களுக்கு பலவிதமான நோய் தொற்றுகள் வந்து சேரும்.



மனிதர்கள் நோய்தொற்று இல்லாமல் வாழ வேண்டுமென்றால், அதற்கு பாறு கழுகுகள் உயிர்வாழ வேண்டும்"

பாறு கழுகுகள் வாழ்க்கை முழுவதும் ஒரே துணையோடு மட்டுமே வாழும். ஆண்டுக்கு ஒரேயொரு முட்டைதான் இடும். பாறுக்கள் உருவத்தில் பெரிய பறவை என்பதால் கூட்டுக்குள் ஒன்றுக்கும் மேற்பட்ட குஞ்சுகளை வைத்துப் பாதுகாக்க முடியாததும்கூட, ஒரேயொரு முட்டையிடுவதற்கு காரணமாக இருக்கலாம்.

# ஆண் பாதி - பெண் பாதி

## ஆச்சரிய சிலந்தி!





தாய்லாந்து நாட்டில் கண்டறியப்பட்ட பாதி ஆணும் பாதி பெண்ணுமான சிலந்தி இனம் விஞ்ஞானிகளை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. இருபாலின அல்லது இரண்டு பாலுறுப்புகளைக் கொண்ட பூச்சிகள் இருந்தாலும், இந்தச் சிலந்தியின் உடல் சரியாக இரண்டாக பிரிந்திருப்பது ஆச்சரியப்படுத்தியிருக்கிறது.

ஒரு பாதி உடல் ஆரஞ்சு நிறத்திலும் மற்றொரு பாதி உடல் சாம்பல் நிறத்திலும் காணப்படுகிறது. இரண்டு பக்கங்களும் தனித்தனியான தன்மைகளைக் கொண்டுள்ளது. இந்த சிலந்தியை டமார்கஸ் இனாசுமா (Damarchus inazuma) என அழைக்கின்றனர்.

ஆசியா மற்றும் ஆபிரிக்காவில் காணப்படும் பெரிய சிலந்திகள் Bemmeridae என்ற குடும்பத்தைச் சார்ந்தவை. இந்தக் குடும்பத்தில் Gynandromorphism தன்மை காணப்படுவது இதுவே முதன்முறை.

Mygalomorphae என்ற பழமையான சிலந்தி வகைகளில் இது மூன்றாவது gynandromorphism கண்டுபிடிப்பாகும்.

வலது பக்கம் ஆண் தன்மையையும் இடது பக்கம் பெண் தன்மையையும் வெளிப்படுத்துகிறது. பெண் பக்கம் ஆரஞ்சு நிறத்தில் பெரிய பற்களுடன் காணப்படுகிறது, ஆண் பக்கம் வெளிர் சாம்பல் நிறத்தில் சற்று சிறியதாக உள்ளது.

இதன் இந்த வித்தியாசமான தோற்றம் காரணமாக ஒன் பீஸ் அனிமேஷன் தொடரில் வரும் ஆணாகவும் பெண்ணாகவும் மாறக்கூடிய கதாபாத்திரத்தை சுட்டிக்காட்டும் வகையில், Damarchus inazuma எனப் பெயரிட்டுள்ளனர்.

இந்த சிலந்தி விஷமுள்ளதா உள்ளிட்ட பல கேள்விகளுக்கு இனி வரும் பரிசோதனைகளில் விடை கண்டுபிடிக்கப்படும் என ஆய்வாளர்கள் உறுதியளித்துள்ளனர்.

# தெளிவே என் சிந்தனையுள்... 41


அடர்ந்த காட்டின் நடுவே 60 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்யும் எண்ணத்துடன் ஒரு மரத்தில் தூக்குக் கயிற்றை மாட்டிக் கொண்டிருந்தார். அவ்விடத்திற்கு வந்த சுவாமி ஒருவர் அதைக் கண்ணுற்று, அவரை தற்கொலை செய்யவிடாமல் கயிற்றைப் பிடுங்கி எறிந்துவிட்டு, ஏன் இந்த முடிவு என அவரிடம் வினவுகிறார்.

"வாழ்க்கை வெறுத்து விட்டது பெரியவரே" நான் பெத்து வளர்த்த மகன் வாழ்வில் நன்றாக வரவேண்டும் என்பதற்காக அவன் தவறு செய்த போதெல்லாம் தண்டித்திருக்கிறேன். ஆனாலும் தந்தை என்ற ஸ்தானத்தில் இருந்து நான் தவறியதேயில்லை.

இப்போதும் மன்னிக்க முடியாத குற்றம் ஒன்றைச் செய்ய முற்பட்டான் தடுத்தேன். என்னை நெஞ்சில் பிடித்து தள்ளி, கையை ஓங்கி விட்டான். ஒரு தந்தையாக நான் தோற்றுவிட்டேன். இனி இந்த உலகத்தில் நான் வாழ்வதில் அர்த்தமில்லை. ஆதலால்தான் நான் இந்த முடிவெடுத்தேன். நான் இறந்த விடயம்கூட அவனுக்குத் தெரியக்கூடாது என்றே நடுக்காட்டிற்கு வந்தேன் என்றார். உங்களைக் கை ஓங்கியதற்காக உங்கள் மகன் தானே தற்கொலை செய்ய வேண்டும். ஒரு தவறும் செய்யாத நீங்கள் ஏன் இந்த முடிவை எடுக்க வேண்டும் என்றார் சுவாமி.

இல்லை அவன் வாழும் பிள்ளை. அவனை அப்பிடி நினைப்பதே பாவம் என்றார் அந்த அப்பாவித் தந்தை. அந்த முதியவரின் கைகளைப் பற்றியபடி "ஐயா இந்த உலகில் எமக்கு வரும் பிரச்சினைக்கு தற்கொலைதான் முடிவென்றால், ஏன் நம்மை ஆறறிவு படைத்த மனிதனாக இறைவன் படைக்க வேண்டும் என்றார் சுவாமி.

மனம்மாறிய முதியவர் அந்தச் சுவாமியின் ஆச்சிரமம் நோக்கி நடக்கத் தொடங்கினார்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : படக்கோட்டி (1964)
இசை : விஸ்வாநாதன் – ராமமூர்த்தி
வரிகள் : வாலி
பாடியவர் : டி.எம். சௌந்தர்ராஜன்



உலகத்தின் தூக்கம் கலையாதோ
உள்ளத்தின் ஏக்கம் தொலையாதோ
உழைப்பர் வாழ்க்கை மலராதோ
ஒரு நாள் பொழுதும் புலராதோ

தரை மேல் பிறக்க வைத்தான்
எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான்
கரை மேல் இருக்க வைத்தான்
பெண்களை கண்ணீரில் குளிக்க வைத்தான்
தரை மேல் பிறக்க வைத்தான்

கட்டிய மனைவி, தொட்டில் பிள்ளை
உறவை கொடுத்தவர் அங்கே
அலை கடல் மேலே அலையாய்
அலைந்து உயிரை கொடுப்பவர் இங்கே

வெள்ளி நிலாவே விளக்காய் எரியும்
கடல் வீடு தான் எங்கள் வீடு
முடிந்தால் முடியும்
தொடர்ந்தால் தொடரும்
இது தான் எங்கள் வாழ்வு
இது தான் எங்கள் வாழ்க்கை

கடல் நீர் நடுவே பயணம் போனால்
குடிநீர் தருபவர் யாரோ
தனியா வந்தோர் துணிவை தவிர
துணையாய் வருபவர் யாரோ
ஒரு நாள் போவார் ஒரு நாள் வருவார்
ஒவ்வொரு நாளும் துயரம்
அரை ஜான் வயிற்றை வளர்ப்பவர் உயிரை
ஊரார் நினைப்பது சுலபம்

# உலகின் 5 ஆபத்தான பாதைகள்

உலகில் 'கரணம் தப்பினால் மரணம்' எனும் படியான, ஆபத்தான ட்ரைவிங் ஸ்பாட்களை லிஸ்ட் எடுத்தால், 50 தேறும். இடப்பற்றாக்குறை கருதி, அதில் எனக்குப் பிடித்த முதல் -5 இடங்களைப் பட்டியல் இட்டிருக்கிறேன்.

**பேபர்ட் - துருக்கி**

கடல் மட்டத்திலிருந்து சுமார் 6.667 அடி உயரத்தில் உள்ளது இந்தச் சாலை. துருக்கியில், குறிப்பாக டிராப்சன் மற்றும் பேபர்ட் மாகாணங்களில் உள்ள D915 சாலை. பேபர்ட்டுடன் இணைக்கிறது. இது D915 டெரெபாசி வளைவுகள் என்று அழைக்கப்படுகிறது. மேலும் இது உலகின் மிகவும் ஆபத்தான சாலைகளில் ஒன்று. இதில் 38 இறுக்கமான, பாதுகாப்புத் தடுப்பு இல்லாத ஹேர் பின் வளைவுகள் மற்றும் சில பகுதிகளில் 275 மீற்றர் சரிவும் உள்ளது. ஒக்டோபர் முதல் ஜூன் வரை மூடக்கூடிய மூடுபனி மற்றும் பனி போன்ற தீவிர வானிலை நிலைமைகளுக்கும் இந்தச் சாலை பெயர் பெற்றது. கனரக வாகனங்கள் செல்ல முடியாது. கார், பைக் ரைடர்ஸூக்குச் சவாலான பாதை இது.

துருக்கியின் மலைப்பாங்கான நிலப்பரப்பின் வழியாகச் செல்லும் இந்த சாலை, அதன் செங் குத்தான பாறைகள், இறுக்கமான கொண்டை ஊசி வளைவுகள் மற்றும் தடுப்புச் சுவர்கள் இல்லாததால் பெயர் பெற்றது. இது ஒரு த்ரில்லிங் டிரைவிங்குக்குப் பெயர் பெற்றது.

இதை தனித்துவமாக்குவது என்னவென்றால் - சாலையின் சவாலான திருப்பங்கள், கரடு முரடான மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகளின் அழகிய காட்சிகளுடன் இணைந்து ஆபத்து மற்றும் அழகின் கலவையை உருவாக்குகின்றன. இது துணிச்சலான ஓட்டுநர்களை மேலும் பலவற்றிற்காக மீண்டும் வர வைக்கிறது.

**அட்லான்டிக் பெருங்கடல் சாலை -நோர்வே**

1980இல் நோர்வே அட்லாண்ட்டிக் பெருங்கடல் சாலையைக் கட்ட சுமார் 6 வருடம் ஆனது. இது மொத்தம் 8 கிமீ தூரம் நீளம் கொண்ட, இரண்டு தீவுகளுக்கு இடையே ஒரு அமைதியான, ஆபத் தான பாதையைக் கொண்டது. அவெரோயா தீவில் உள்ள கார்வாக் கிராமங்களைப் பிரதான நிலப் பகுதியில் உள்ள வேவாங்குடன் இணைக்கிறது இது. வளைவு, சாய்வு, செங்குத்து, நேராகவே இல்லாத ஒரு ரோலர்கோஸ்ட்டர் பயணம் இது. அதுவும் கடல் சீற்றம் வந்தால் அவ்வளவுதான். கடல் நீரில் உங்கள் வண்டி தள்ளாடி மூழ்க வாய்ப்பு அதிகம். முக்கியமாக விசிபிலிட்டி இருக்காது. இந்த 35 கி.மீ ரோட்டில் 8 பாலங்களும், அது கட்டப்பட்ட அழகும் ஆசம். இந்த 8 பாலங்களை எந்தவித ஆபத்தும் இல்லாமல் கடந்தால், நீங்கள் ஒரு மாபெரும் டிரைவர். இத்தனைக்கும் இது கடல் மட்டத்திலிருந்து 75 அடிதான் உயரம் கொண்டது.

**ஹனா- ஹவாய்**

ஹவாய் ஒரு அழகான டிராபிக்கல் பாரா டைஸ். இங்கேயும் ஆபத்தான பல இடங்கள் உண்டு. அதிலும் ஹனாவுக்குச் செல்லும் சாலையில் வாகனம் ஓட்டுவது ஆபத்தானது. ஏனெனில் அதன் பல குறுகிய, 600இற்கும் மேற்பட்ட வளைவுகள் மற்றும் செங்குத்தான சரிவுகள், குறிப்பாக ஹனாவைத் தாண்டிய பாறைப் பகுதிகளில், அத்துடன் பள்ளங்கள், வெள்ளம் மற்றும் குறைந்த செல் சேவையின் அபாயம் உள்ளது. எப்போது வேண்டுமானாலும் நிலச்சரிவு ஏற்படும் என்பது மாதிரியான டிசைன்தான் இதன் ஆபத்தே! இந்த ரோடு 51 சிங்கிள் லைன் பிரிட்ஜ்கள் கொண்டது. ஹவாயில் உள்ள ஹனாவுக்குச் செல்லும் பாதை தோராயமாக 103.6 கிலோமீற்றர்கள (64.4 மைல்கள்) நீளமானது.

இது கஹூலுயை ஹவாயின் மௌய் தீவில் உள்ள ஹனா நகரத்துடன் இணைக்கிறது. அதைப் பாதுகாப்பாகக் கடக்கும்போது, சுற்றிப் பார்ப்பதைவிட சாலையில் கவனம் செலுத்துவதற்கு முன்னுரிமை கொடுத்துத்தான் ஓட்டுகிறார்கள் உள்ளூர்வாசிகள். இரவில் அல்லது மழையில் வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்கவும். கூட்டத்தைத் தவிர்க்கவும் - அதற்குப் பதிலாக அதிகாலையில் பயணத்தைத் தொடங்க இங்கே அரசாங்கத்தால் சுற்றுலாவாசிகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது. இருந்தாலும் ஹவாயோடு இயற்கையை ரசிக்க வேண்டுமென்றால், கொஞ்சம் ரிஸ்க் எடுப்பதில் தப்பில்லை என்று ரஸ்க் சாப்பிடு பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

**பாஸ்லேஸ் டிகோயிஸ் - பிரான்ஸ்**

பிரான்ஸில் உள்ள இந்த 4.5 கி.மீ நேர்ரோடு, பிரான்ஸ் மெயின்லான்ட்டையும் லாயர் மௌளன் டையும் இணைக்கக் கட்டப்பட்டது. இந்த ரோட்டை முதலில் பார்க்கும்போது, 'நல்லாதான இருக்கு. இதுக்கு என்ன குறைச்சல்' என்று என்னைக் கழுவி ஊற்ற ஆரம்பித்து விடுவீர்கள். கண்ணிமைக்கும் நேரத்தில் கோயில் வாசலில் உள்ள செருப்பைப் பறிகொடுப்பாரே வடிவேலு. அதுபோல் கண நேரத்தில் திடீரென இந்தச் சாலை காணாமல் போகும். காரணம், கடலரசன்தான். 'நடுக்கடலுக்கு வந்துட்டோமோ என்று நம்மை மெஸ்மரைஸ் செய்துவிடும் கடல் அலைகள். குறைந்த அலை எப்போது வரும் என்று பார்த்துப் பார்த்துத்தான் மக்கள் பயணிக்கிறார்கள். 13 அடிக்கு மேல் எழுந்து மூடும் சாலையில் பயணித்து இறந்தவர்கள் இங்கே அதிகம். அது மட்டுமல்லாமல், இந்தச் சாலையில் ஈரப்பதம் எப்போதுமே வழுக்கியெடுக்கும். நமது வாகனங்கள் கன்ட்ரோல் இல்லாமல் தண்ணிக்குள் விழ வாய்ப்பு உண்டு. கடல் மட்டத்திலிருந்து எவ்வளவு உயரம் இருக்கும் என்று இங்க மட்டும் கேட்க முடியாது. ஏன் என்றால், இந்தச் சாலையே கடல்லதான் இருக்குது.

**காராகோரம் - சீனா- பாகிஸ்தான்**

சீனாவையும் பாகிஸ்தானையும் 1300 கிமீ அளவில் இணைக்கிறது இந்த காராகோரம் ஹைவே. இமயமலையின் ஓர் உயரத்தில் இருக்கும் இந்த ரோடு ரொம்ப ஆபத்தானது. ஆனாலும் இது ரைடர்களால் விரும்பப்படும் ஓர் அற்புதமான டூரிஸ்ட் ஸ்பாட். இங்கே பனிப்புயல் எப்போது வேண்டுமானாலும் வரலாம். ட்ரைவர்ஸ் எப்போதுமே ஒருவித பயத்தோடுதான் வண்டி ஓட்ட வேண்டும். இங்கே இன்னொரு பயம் இயற்கை இல்லை தீவிரவாதிகள் பயம். ஆம், பாகிஸ்தான் என்றாலே அக்கப்போர் என்கிறீர்களா? ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கு அப்புறம் சரியான ரோடு இருக்காது. ஆனால் முறையாகப் பயிற்சி பெற்ற டெரரிஸ்ட்கள் இருப்பார்களாம். புழுதி பறக்கும் சரளைக் கல் மண்தான் இதன் ஸ்பெஷல். இது உலகின் மிக உயரமான சர்வதேச சாலை. இந்த ஹைவே அடிக்கடி பாறைகள் சரிவுகள், வெள்ளம் மற்றும் பூகம் பங்களால் தாக்கப்படுவதும் உண்டு. லாரிகள், சைக்கிளிஸ்ட், டூரிஸ்டர் நவம்பர் முதல் மே வரை போகாமல் இருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். கடல் மட்டத்திலிருந்து சுமார் 4693 மீற்றர் உயரத்தில் உள்ளது இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்



## காதலனின் பதிலடி!



**கா**தலியைப் பிரிந்து போர்க்களத்தில் இருந்த ஒரு இராணுவ வீரனுக்கு அவன் காதலியிடமிருந்து ஒரு கடிதம். "நீ சென்ற பிறகு எனக்கு ஒரு Boy Friend கிடைத்தான். அவனைத்தான் நான் மணக்கப் போகிறேன். அதனால், உன்னிடம் உள்ள என் புகைப்படத்தை திருப்பி அனுப்பிவிடு" என்று அதில் எழுதியிருந்தது.

அவளுக்கு பதிலடி கொடுக்க நினைத்த அவன், சக வீரர்களின் காதலி, தோழிகள் என்று பல பெண்களின் புகைப்படங்களையும் சேகரித்து, அவற்றோடு அந்தக் காதலியின் புகைப்படத்தையும் சேர்த்து அனுப்பினான். கூடவே, ஒரு கடிதம். "உங்கள் கடிதம் கிடைத்தது. எவ்வளவு யோசித்தும் உங்கள் முகம் எனக்கு ஞாபகம் வரவேயில்லை. அதனால் நான் இதுவரை சந்தித்த எல்லா பெண்களின் புகைப்படத்தையும் அனுப்பி உள்ளேன். உங்கள் படத்தை எடுத்துக்கொண்டு, மற்றதை திருப்பி அனுப்பி விடவும்!" நம்மைப் புறக்கணிப்பவர்களுக்கு சரியான தண்டனை நாம் அவர்களைப் புறக்கணிப்பதுதான்.

## மனைவியின் புத்திசாலித்தனம்



**ஒ**ரு பெரிய நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒரு இளைஞன் அடிக்கடி நோய்வாய்ப்பட்டுக் கொண்டிருந்தான். பெரிய பெரிய டாக்டர்களைப் போய்ப் பார்த்து, மருந்து, இஞ்செக்ஷன் எல்லாம் வாங்கிப் போட்டும் எவ்விதப் பயனும் கிடைக்கவில்லை. கடைசியில் அவனுடைய புத்திசாலி மனைவி ஒருநாள் சொன்னாள். "நீங்கள் மனிதர்களுக்கு வைத்தியம் பார்க்கும் டாக்டர்களை விட்டுவிட்டு ஏதாவது ஒரு நல்ல வெட்னரி டாக்டரிடம் (மிருக டாக்டரிடம்) போய் உடம்பைக் காட்டுங்கள். அவர்தான் உங்களுக்கு சரியான ட்ரீட்மெண்ட் கொடுக்க முடியும்" என்றாள்.

"என்னது மிருக டாக்டரிடமா? உனக்கென்ன மூளை கெட்டுப் போச்சா?" என்று சீறினான் கணவன்.

"எனக்கொன்றும் கெட்டுப் போகவில்லை. உங்களுக்குத்தான் எல்லாமே கெட்டுப் போய்க் கிடக்கிறது. காலங் காலத்தாலே கோழி மாதிரி விடிவதற்கு முன்பே எழுந்திருக்கிறீர்கள்! பின்பு காக்கா மாதிரி குளித்து விட்டு, குரங்கு மாதிரி "லபக் லபக்" என்று இரண்டு வாய் தின்றுவிட்டு பந்தயக் குதிரை மாதிரி வேகமாக ஓடி ஆபிஸ்'க்குப் போகிறீர்கள்!

அங்கே போய் மாடு மாதிரி உழைக்கிறீர்கள்! உங்களுக்கு கீழே வேலை செய்கிறவர்கள் மீது கரடியாக கத்துகிறீர்கள்! பின்பு ஆபிஸ் விட்டவுடனே, ஆடு, மாடுகள் மாதிரி பஸ்ஸிலே அடைந்து வீட்டுக்கு வருகிறீர்கள். வந்ததும் வராததுமாக, நாள் முழுவதும் வேலை செய்த களைப்பிலே நாய் மாதிரி என் மேலே சீறி விழுகிறீர்கள்!

பின்பு முதலை மாதிரி இரவுச் சாப்பாட்டை "சரக் சரக்" என்று முழுங்கிவிட்டு, எருமை மாடு மாதிரி போய் படுத்துத் தூங்குகிறீர்கள்! மறுபடியும் விடிந்தால் அதே மாதிரி கோழி கதைதான்! இப்படி இருக்கிறவர்களை மனித டாக்டர் எப்படிங்க குணப்படுத்த முடியும்? அதனாலேதான் சொல்கிறேன். நாளைக்கே ஒரு கால்நடை டாக்டரைப் போய் பாருங்கள்" என்று ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள் மனைவி. என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் கணவன் முழிக்க, "ஆந்தை மாதிரி முழிக்காதீர்கள், போங்கள்" என்று கூறினாள் மனைவி.

## கவிதைக் கலசம்

### ஒரு கடல் - இரண்டு இதயம்



**ஒ**ரே தாய்மொழி இரு கரைகள்
கடல் நடுவே குரல் பேசும் தருணங்கள்
அங்கே ஒரு பக்கம் வலி
இங்கே ஒரு பக்கம் நம்பிக்கை
இரண்டிலும் ஓடும் நதி -
"தமிழ்" எனும் உளவியல்

மனதின் ஆழம் கடலைப் போல
பேசாத பாசம் புயலாகும்
கண்ணீரில் நினைவுகள்,
சிரிப்பில் சுவாசம்,இரு நாடும்
ஒரே நெஞ்சம், ஒரே இரத்தம்

பிரிவின் புண், இணைதல் நம்பிக்கை
அறிவியல் சொல்வது - மனம் வேர் தேடும்!
தமிழின் மனநிலை - துயரத்தையும்
தாங்கும், அன்பைத் தேடும் அதே சமயம்
கற்றுக் கொடுக்கும்

அலைகள் மோதினாலும் அடித்தளம் ஒன்றே
மனிதம் பேசும் மொழி - தமிழ்
என்றென்றும் நின்றே!

**நடராசா கோபிராம்,**
**உளவியல் சிறப்புக்கலை மாணவன்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### பாரதியின் புதுமைப் பெண்



**பா**ரதியின் பெண் சுதந்திரம்
பாழாய் போவதற்கோ பகன்று சென்றான்
ஆணுக்கு நிகர் என்பாய்
அறியாமை இருள் அகற்றி
அடிமைக் கோலம் ஏன் உனக்கு...
தலை நிமிர்ந்து புதுமைப் பெண்ணாய்...
தரணி நோக்கு என்றான்...



புதுமை தேடி மதுக்கிண்ணத்தில் தலை குனிந்தாய்...
போதை ஏறி தள்ளாடி பேதையர்க்கோ இழி நிலை...
தாயின் கருவினிலே சிதைந்து போகத் தவறி
நிலை கெட்டு திமிராய்...
திரிய பெண் ஜென்மம் எடுத்தாயோ...
பாரதி இன்றிருந்தால் தப்பாய் போனது சுதந்திரம்...
என்று நெஞ்சு பொறுக்காமல்
அவனும் விம்மி அழுது
அறியாமை அகற்ற முடியாமைக்கு வருந்துவான்

**செல்வா, மட்டுவில் வீதி,**
**கல்வயல் சாவகச்சேரி.**

அன்பு வாசகர்களே!
உங்கள் அபிமான
சங்குநாதத்தில் நீங்களும்
எழுதலாம்...
☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை
ஆக்கங்களை உங்கள் பெயர்,
முகவரி, தொலைபேசி இலக்கம்
என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.
ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

### விடியலை நோக்கி...



**வீ**ட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும்
சிறைச்சாலைக் கைதி நான்
சுத்தித் திரிய ஆசையிருந்தும்
கூண்டில் சிக்கித் தவிக்கும் கிளி நான்

எனது ஆசைகளை வெளியில் சொல்ல
முடியாத சிட்டுக்குருவி நான்
நிலவு வரவில்லை என்று அமாவாசையில்
கண்ணீர் சிந்தும் தேனீ நான்

எப்பொழுது என்நிலை மாறும் என்று
இறைவனை வணங்கும் அடியார் நான்
என்னாலே என்நிலையை மாற்ற முடியும்
என்று போராடும் மனிதன் நான்

**ஆக்கம் - சி.ஜெயசோதிகா,**
**3ஆம் வட்டாரம், நயினாதீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ். கோட்டை



**81**

**செங்கை ஆழியான்**

26 செப்ரெம்பர் 1990 அதிகாலை 12.15.

மறு நாள் தியாகி திலீபனின் 3 ஆவது நினைவு நாள். விடுதலைப்புலிகள் கோட்டையை விடுவிப்பதற்கான இறுதி முயற்சியில் இறங்கினர். நள்ளிரவுப் பயங்கரத்தில் கோட்டைக்குள் "பசீலன் 2000" குண்டுகள் 50 வரையில் மழையாக இறங்கின. ஸ்ரீலங்கா இராணுவத்தினர் எதிர்நிற்க முடியாது தப்பி ஓடிவிடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

முன்னரே திலீபனின் நினைவு நாளில் நிச்சயம் கோட்டை தாக்கப்படும் என்பதை அவர்கள் தீர்மானித்து வைத்திருந்தார்கள். அதனால் மக்கள் வங்கிக்குச் சொந்தமான நகைகள், வங்கிக்குச் சொந்தமான பணம் என்பன இருந்த இரும்புப்பெட்டிகள் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டு எடுத்துக் கொள்ளப்பட்டன. புழைய துவக்குகள் ஆயிரக்கணக்கில் தீயிடப்பட்டன. வாகனங்கள் பல தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இவ்வளவும் நிகழ்த்தி விட்டுத் தயாராக இருந்தனர்.

பெண்கள் சிறைச்சாலைக்கு அருகில் கோட்டை மதிலின் தென் பக்கத்தில் ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட நீர் வழி (Water Gate) இருந்தது. அது பின்னர் கழிவுகளை அகற்றுவதற்கான வாயிலாகப் பயன்பட்டது. கோட்டை சிறைச்சாலையாக மாறியபோது, அது பாதுகாப்பில்லை என எண்ணி வாயிலைக் கொங்கிறீட் கற்களினால் அடைத்துக்கட்டியிருந்தனர். அந்த வாயிலை அடைத்த பலமற்ற கொங்கிறீட் கற்களை அகற்றிவிட்டு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அதன் ஊடாக இரவோடிரவாகத் தப்பி ஓடினர். 365 வருட ஆதிக்க நிலையை விட்டு அவர்கள் புறமுதுகிட்டுத் தப்பிச் சென்றனர். யாழ் கோட்டையை விட்டு வெளியேறுவதென தாம் முடிவு செய்தமைக்கான காரணத்தைப் பின்னர் ஸ்ரீ லங்கா அரசு கூறியது. யாழ்ப்பாண வைத்தியசாலையை இயங்கச் செய்வதற்காகத் தாம் கோட்டையைவிட்டு வெளியேறியதாகக் கூறியது. "புதன்கிழமை கோட்டையை விட்டு ஸ்ரீலங்கா இராணுவம் வெளியேறும், அடுத்த 72 மணித்தியாலங்களில் மண்டை தீவை விட்டும் வெளியேறும்" இராணுவம் எனக்கூறிய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜரத்னவும். இராணுவத் தளபதி ஹமில்ரன் வன சிங்கவும் உடனடியாகத் தென்கொரியாவுக்குப் பயணமாகினர். கோட்டைக்குள்ளிருந்த ஆயிரம் தானியங்கு துப்பாக்கிகளும், ஆறு இலட்சம் துப்பாக்கி ரவைகளும், 30 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க நகைகளும், 40 மில்லியன் ரூபா பெறுமதியான பணமும் தம்மால் கூடவே எடுத்து வரப்பட்டதாகவும் பின்னர் ஸ்ரீலங்கா அரசு அறிவித்தது. எது எவ்வாறாயினும், எது உண்மையெனில்-சரியாக 10.48 மணிக்கு, திலீபன் இறந்த நேரத்தில், விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி பாணு கோட்டை மீது புலிக் கொடியை ஏற்றினார். நான்கு நூற்றாண்டுகளாக ஆதிக்கச் சின்னமாக விளங்கிய யாழ் கோட்டையில் தமிழர் கொடிஏற்றப்பட்டது. (முற்றும்)

# புது வாழ்வு




## கடற்புறா

**172**

அறையைத் தாழிட முயன்றான். அடுத்த விநாடி மதுவற்ற மதுக்கிண்ணம் மேலே பறந்தது. கூரையில் "கிளாங்" என்று தட்டி ஒலியெழுப்பி அறை மூலையில் விழுந்தது. இளையபல்லவன் உடல் அந்தத் தாழிட்ட கதவின் மீது சாய்ந்தது. துவண்டது. தொப்பென்று கீழே சுருண்டு விழுந்தது. பலவர்மன் அறை மூலைக்கு ஓடிக் கிண்ணத்தை எடுத்துப் பார்த்தான். அதிலிருந்த மதுவில் ஒரு துளி கூட மீதியில்லை. அந்த மூலையிலிருந்த அறைக்கதவை நோக்கினான். அதன் கீழே கிடந்தது இளையபல்லவன் சடலம்- ஆடாமல் அசையாமல். முகத்தில் வெற்றிக்குறி உலாவக் கதவிடம் சென்று இளைய பல்லவன் உடலை இருமுறை காலால் உதைத்துப் பார்த்தான் பலவர்மன். அங்கங்கள் உயிரின்றிச் செயலிழந்து கிடந்தன.

அங்கிருந்து அறை நடுவே வந்த பலவர்மன் மதுக்கிண்ணமொன்றைக் கையிலெடுத்துக் கொண்டு, "ஒழிந்தான் என் விரோதி! இந்த இரவு முதல் அக்ஷயமுனைக்குப் புதுவாழ்வு துவங்குகிறது. என்று இரைந்து கூவி வாயில் கிண்ணத்தை வைத்து மதுவை உறிஞ்சினான். அதே சமயத்தில் வெளியே காட்டுப் பகுதியில் பூர்வகுடிகளின் பலத்த கூச்சல் எழுந்தது. சில விநாடிகள் மதுக் கிண்ணத்துடன் ஆசனத்தில் அமர்ந்த பலவர்மன் வெளியே கேட்ட கூச்சலைக் கேட்டு மிகுந்த திருப்தியுடன், "பூர்வகுடிகள் நெருங்கி விட்டார்கள். சண்டையை, இல்லை இல்லை, இந்த நகர மக்களின் அழிவை நான் மாடிக்குச் சென்று பார்க்கிறேன்" என்று இரைந்து கூறிக்கொண்டு ஆசனத்தை விட்டு எழுந்திருக்க முயன்ற பலவர்மன் அடுத்த விநாடி பேரதிர்ச்சியுற்றான். "ஆசனத்தை விட்டு அகலாதே" என்ற இளையபல்லவன் குரல் அந்த அறையைப் பயங்கரமாக ஊடுருவிச் சென்றது. கதவிருந்த இடத்தை நடுக்கத்துடன் நோக்கினான் பலவர்மன்.

நீண்ட கத்தியை உருவிப் பிடித்த வண்ணம் கதவில் சாய்ந்து கொண்டு அலட்சியப் புன்முறுவலுடன் நின்றான் இளையபல்லவன். "உண்மையையே கூறினாய் பலவர்மா! இன்றுமுதல் அக்ஷயமுனைக்குப் புதுவாழ்வு தான்" என்ற சொற்களும் இளையபல்லவன் வாயிலிருந்து இகழ்ச்சியுடன் உதிர்ந்தன.

### சுயநலச் சதுரங்கம்

இமை நொடிக்கு முன்பாக இடது கையால் அறைக் கதவைத் தாழிட்டு, வலது கையால் வாளை உருவிப் பிடித்த வண்ணம் கதவின்மீது வெகு அலட்சியமாகச் சாய்ந்து நின்று இளநகை காட்டிய இளையபல்லவனைக் கண்டதும் இடிந்துபோய் ஏதும் பேச மாட்டாமல் பல விநாடிகள் உட்கார்ந்துவிட்ட பலவர்மன், உணர்ச்சிகளின் பெருக்கால் தன் நிதானத்தையெல்லாம் அடியோடு காற்றில் பறக்க விட்டு, "அயோக்கியன்! அயோக்கியன்! நீ பரம அயோக்கியன்!" என்று அந்த அறையே அதிரும்படியாக இரைந்து கூவினான்.

எந்த நிலையிலும் நிதானத்தைக் கைவிடாத பலவர்மன் நிலை குலைந்து அப்படி இரைந்து கூவியதைக் கண்டு இளநகையை உதடுகளில் விரிவடையச் செய்து கொண்ட இளையபல்லவன், "கோட்டைத் தலைவர் கோபத்துக்குக் காரணமிருக்கிறது. இருப்பினும் மன்னிக்க வேண்டும்" என்று அந்த இளநகையைத் தொடர்ந்து சொற்களையும் உதிரவிட்டான்.

அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன் மட்டும் சுய நிலையில் இருந்திருந்தால் படைத்தலைவனின் பதிலில் ஊடுருவிச் சென்ற ஏளன ஒலியைக் கவனித்திருப்பான். ஆனால் அந்தச் சமயத்தில் அவன் இருந்த அவல நிலையில் எதையும் கவனிக்கும் சக்தியை இழந்துவிட்டதால், "மன்னிப்பதாவது! உன்னைக் கொலை செய்ய வேண்டும்," என்று மீண்டும் கூவினான் பலவர்மன்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா துளிகள்



**2018இல்** சத்யராஜ், ஜெய், ஜெயராம், சிவா, நிவேதா பெத்துராஜ், ரெஜினா உள்ளிட்ட நட்சத் திரங்களை வைத்து, "பார்ட்டி" என்றொரு படத்தை இயக்கினார், வெங்கட் பிரபு. முழுக்க பிஜி தீவில் காமெடி கலாட்டாவாக உருவான இந்தப் படம், பணப் பிரச்சினை காரணமாக ரிலீஸ் ஆகாமலேயே கிடந்தது. தற்போது, இந்தப் படத்தைத் தூசுதட்ட ஆரம்பித்துள்ளனர். அநேகமாக, எதிர்வரும் பெப்ரவரியில் ரிலீஸ் ஆகலாம் என்கிறார்கள்.



**"புன்னகை அரசி"** கே.ஆர்.விஜயா, "99/66 - தொண்ணூற்றொன்பது / அறுபத்தாறு" என்ற படத்தில் முக்கியமான கதாபாத்திரத் தில் நடித்துள்ளார். ரச்சிதா மகாலட்சுமி ஹீரோயினாக நடிக்கும் இந்தப் படத்தில் பல காட்சிகள்... மியான்மர், தாய்லாந்து, இலங்கை போன்ற நாடுகளில் உள்ள புத்த மடாலயங்களில் படமாக்கப்பட்டுள்ளன. ஐந்நூறு புத்த பிக்குகளின் மத்தியில் பாடல் காட்சிகளையும், முக்கியமான சில காட்சிகளை யும் படமாக்கியுள்ளனராம்.





**பாலா, அடுத்ததாக** இயக்கவிருக்கும் படத் தின் வேலைகள் ஆரம்பமாகி யுள்ளன. ஆர்யாவும் அதர்வாவும் சேர்ந்து நடிக்கலாம் என்று பேசப்படுகி றது. உருவ மாறுதல்கள் எதுவும் இல்லா மல் உள்ளது, உள்ளவாறு அவர்கள் நடிக்கப் போவதாக செய்திகள் உலா வுகின்றன. இன்னும் இரண்டு மாதத்தில் அதற்கான அறிவிப்பு வரலாம் என்கிறார்கள்.



**பிரபுதேவாவின்** "மூன் வாக்" படத்தை நடனத் துக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுத்துள்ளனராம். படத்தின் ஐந்து பாடல்களையும் ஏ.ஆர்.ரஹ்மானே பாடி யிருப்பதால், பிரபுதேவாவும் அதற்கென தனி மெனக்கெடல் காட்டியிருக்கிறார். ஒவ்வொரு பாடலுக்கும் இரண்டு வாரங்கள் ரிகர்சல் எடுத்துள்ளனர். அதிலும் "மயிலே" என்ற பாடலுக்கு மட்டும் ஒரு மாதம் ரிகர் சல் எடுத்துள்ளதாகச் சொல்கிறார்கள். காரணம், அந்தப் பாடலுக்காக முழு உலகத்தையே கிராபிக்ஸில் கொண் டுவந்து நிறுத்தியிருக்கிறார்க ளாம்!



**பகத் பாசிலின்** "ஆவேசம்" படத்தின் இயக்குநரான ஜித்து மாதவன் இயக்கத்தில் சூர்யா நடிக்கும் "சூர்யா 47" மூலம் தமிழுக்கு மீண்டும் வருகிறார் நஸ்ரியா. சமீபத்தில், சென்னையில் இதன் படப்பிடிப்பு தொடங்கியிருக்கிறது. படம் குறித்து, "சூர்யா சார் போன்ற பெரிய ஸ்டாருடன் பணியாற்றுவது கூடுதல் உற்சாகத்தைத் தருகிறது. புதிதாக ஒன்றை முயற்சி செய்கிறோம். இதை ரசிகர்கள் வரவேற் பார்கள் என நம்புகிறோம்" என்று தன்னடக்கத்துடன் சொல்கிறார் ஜித்து மாதவன்.

# சொல்லவே இல்ல...

## சபரி



மழைக்காலங்களில் சென்னையில் பாதிப்பு என்றால் உடனே வாலண்டியராக களத்தில் இறங்கிவிடுவாராம் சபரி. கடந்த சில ஆண்டுகளாக இதைச் செய்துவருகிற சூழலில், இந்த ஆண்டு பிக்பாஸ் செல்ல வாய்ப்பு வந்ததும், தன் நட்பு வட்டத் தில் சிலரிடம், "நான் வந்தாலும் வராவிட்டாலும் அதை நிறுத்தாமல் செய்ய வேண்டும்" என்று சொல்லி அதற்கான சில ஏற்பாடுகளையும் செய்துவிட்டே உள்ளே சென்றாராம்.

# மினி டைரி...

## அர்ச்சனா



**ஆங்கரிங் தாண்டி, பிடித்தது**
மியூசிக். நிறைய பாட்டு கேட்பேன்.

**ஆசை**
புத்தகம் ஒன்று எழுத வேண்டும். என் சொந்த அனுபவம்தான் கன்டென்ட். அடுத்து விஜய் சார்கூட வேர்க் செய்ய ஆசைப்பட்டேன். ஏனென்றால் சாரா அவருடைய ரசிகை. ஆனால் இனி படம் நடிக்க மாட்டேன் என்றுவிட்டார். உடனே அரசியலில் அவர்கூட வேர்க் செய்ய வாய்ப்பிருக்கா என்று கேட்பீர்கள்தானே, அந்தக் கேள்விக்கு நோ கமென்ட்ஸ்!

**சாப்பாடு**
நல்லா சமைப்பேன், சாப்பிடுவேன். தயிர் சாதம் என் பேவரிட்.

**பயம்**
முன்பு எல்லாம் மரணத்தைக் கண்டு பயம் இருந்தது. இப்போது இல்லை.

**மனதுக்குள் ஒலிக்கும் தத்துவம்**
அன்பாக இருங்கள் எல்லோருடனும், அது போதும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல்

476


வலம்புரியின் மருத்துவச்சுடர்

# முழு ஆடைப்பால் ஆரோக்கியமானதா?

பாலும், பாலினால் செய்யப்பட்ட பாற்பொருட்களும் எமது உணவில் அன்று முதல் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இன்றைக்கு பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதன், பிற விலங்குகளிலிருந்து பெறப்பட்ட பாலை பயன்படுத்தி வந்துள்ளான். கி.மு. 8000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆடு, மாடு போன்ற விலங்குகளில் இருந்து கிடைக்கும் பாலை, மனிதன் பயன்படுத்தி வந்துள்ளதாக ஆதாரங்கள் நிரூபிக்கின்றன. பால் ஒரு நிறையுணவு ஆகும். பாலில், கனிப்பொருட்கள், விற்றமின்கள், புரதம், கொழுப்பு, காபோவைதரேற்று போன்ற பல அத்தியாவசியமான ஊட்டச்சத்துகள் அடங்கியுள்ளன. எனவே, வளரும் பிள்ளைகளுக்கு பால் ஒரு அத்தியாவசியமான உணவாகும். ஆனால், பால் அருந்துவது பற்றி எம் மத்தியில் பல சந்தேகங்கள் காணப்படுகின்றன. பால் அருந்துவதால் சளி ஏற்படும், ஆஸ்துமா நோய் தீவிரமாகும், வயதானவர்களுக்கு நல்லதா, குருதி அமுக்கம், நீரிழிவு, கொலஸ்திரோல், ஈரலிலே கொழுப்பு படிவு போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கு பால் ஆரோக்கியமானதா, எந்த விலங்கின் பால் ஆரோக்கியமானது, தற்போது விற்பனைக்கு வந்துள்ள கொழுப்பு குறைக்கப்பட்ட Non fat பால்மா உடலுக்கு நல்லதா அல்லது முழு ஆடைப் பால்மா நல்லதா போன்ற பல சந்தேகங்கள் நம் மத்தியில் நிலவுகின்றன. இது குறித்து தெளிவாகப் பார்ப்போம்.

ஒரு கோப்பை பால், அதாவது 240 ml பாலில் கிட்டத்தட்ட 3.25 வீதமான கொழுப்பு உள்ளது. அதில் கிட்டத்தட்ட 8g கொழுப்பு காணப்படுகிறது. இதைவிட, பாலில் 159 கலோரி சத்து, 88% நீர், 7.7g புரதம், 11.7g காபோவைதரேற்று, 12.3g லக்டோசு எனும் வெல்லம் என்பன காணப்படுகின்றன. இவற்றை விட 276 mg கல்சியம், 322 mg பொற்றாசியம், 344 mg பொசுபரசு என்பன காணப்படுகின்றன. பாலில் நார்ச்சத்து இல்லை. பாலில் இரண்டு வகையான புரதங்கள் காணப்படுகின்றன. பாலில் Casein எனப்படும் கரையாத புரதம் 80% அளவிலும், Whey protein எனும் கரையும் புரதம் 20% அளவிலும் காணப்படுகின்றன. இவ்விரு புரதங்களும் எமக்கு தேவையான அத்தியாவசியமான அமினோஅமிலங்களைக் கொண்ட உயர்தர புரதங்களாகும். இதில் Casein என்ற புரதம், கல்சியம், பொசுபரசு போன்ற கனிப்பொருட்களை உறிஞ்சுவதற்கு அத்தியாவசியமானதுடன், இது உயர் குருதி அமுக்கத்தைக் குறைப்பதற்கும் உதவுகிறது. Whey protein ஆனது நீரிழிவைக் கட்டுப்படுத்த உதவுவதுடன் மன அழுத்தத்தை குறைப்பதற்கும் உதவுகிறது. இதைவிட, தசை வளர்ச்சிக்கும் அது முக்கியமான பங்கு வகிக்கின்றது. இந்த Whey protein குருதி அமுக்கத்தை குறைப்பதற்கும் உதவுகிறது.

பாலில் அதிகளவு கொழுப்பு காணப்படுகிறது. நிரம்பாத கொழுப்பமிலங்களில், mono unsaturated fat 28% உம், poly unsaturated fat 2.3% உம் காணப்படுகின்றன. 70% அளவில் நிரம்பிய கொழுப்பமிலங்கள் காணப்படுகின்றன. இதைவிட பாலில் மட்டும் தனித்துவமாக காணப்படும் லக்டோசு எனும் வெல்லமும் அதிகளவில் காணப்படுகிறது. இந்த வெல்லம் சமிபாடு அடைவதற்கு லக்டேசு எனும் நொதியம் நம் குடலில் காணப்படுவது அவசியமாகும். துரதிஷ்டவசமாக, ஆசிய நாட்டவர்களுக்கு இந்த லக்டோசு நொதியம் குறைவாக காணப்படுகின்றது. ஆகையால், இவர்கள் அதிகளவான பாலை tolerate பண்ண மாட்டார்கள். இதை Lactose Intolerance என்று கூறுவார்கள். இந்நிலையில், பால் குடித்து 30 நிமிடத்திலிருந்து 2 மணித்தியாலத்திற்குள் வாந்தி, வயிற்றோட்டம், வயிற்றுளைவு, வயிறு ஊதல், வாயு வெளியேறுதல் போன்ற பல அறிகுறிகளை இந்நோயாளிகள் கொண்டிருப்பார்கள். ஆகவே, இவர்கள் பாலை அதிகமாக பயன்படுத்தாமல், குறைவாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் அல்லது பாலிற்கு பதிலீடாக சோயா பால் போன்ற பால் வகைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



பாலில் பல்வேறுபட்ட விற்றமின்களும் கனிப்பொருட்களும் காணப்படுகின்றன. குறிப்பாக பாலில், B12 என்ற விற்றமின் நிறைந்துள்ளது. இது மிகவும் சிறந்த விற்றமின் ஆகும். இது தாவர உணவுகளில் காணப்படாது. இதனால், தாவர உணவை உண்பவர்களுக்கு இந்த விற்றமின் பற்றாக்குறை ஏற்படலாம். எனவே, அவர்களுக்கு பாலில் உள்ள விற்றமின் B12 ஒரு மாற்றீடாக அமைகிறது. ஆகையால், தாவர உணவு உண்பவர்கள் கட்டாயமாக பாலை அருந்த வேண்டும்.

இதைவிட, [illegible] விற்றமின் D என்பன பாலில் செறிந்து காணப்படுகின்றன. இவை எலும்பு, பல் வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமானவை. எலும்பில் ஏற்படக்கூடிய Osteoporosis எனும் நோயை எதிர்த்து போராடுவதற்கும், எலும்பு முறிவுகள் ஏற்படாமல் பாதுகாப்பதற்கும் இவை உதவுகின்றன. எனவே, மாதவிடாய் நிறுத்தம் ஏற்பட்ட பெண்கள் பாலைக் கட்டாயமாக அருந்த வேண்டும். பாலில் காணப்படும் கல்சியம், பொற்றாசியம், மக்னீசியம் போன்ற கனிப்பொருட்களும் Casein, whey போன்ற புரதங்களும் உயர் குருதி அமுக்கத்தைக் குறைத்து, குருதி அமுக்கத்தை சீராக வைத்திருக்க உதவுகின்றன. எனவே, உயர் குருதி அமுக்கம் உள்ளவர்கள் எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் பாலை அருந்திக் கொள்ளலாம்.

பாலில், Antioxidants எனப்படும் Zinc, Selenium, Beta carotene போன்ற பதார்த்தங்கள் காணப்படுகின்றன. இவை இருதய நோய்களுக்கு எதிராகவும் புற்றுநோய்களுக்கு எதிராகவும் தொழிற்படுகின்றன். இதைவிட பாலை அருந்துவதால் உடல் நிறையை குறைத்துக்கொள்ள முடியும் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. 16 ஆய்வுகள் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டன. இதில் 11 ஆய்வுகள், முழு ஆடைப்பால் உடல் நிறையைக் குறைப்பதாகத் தெரிவிக்கின்றன. எனவே, உடல் நிறையை குறைக்க விரும்புவோர் பாலை அருந்துவது சிறந்தது. அடுத்ததாக பாலானது, Type 2 Diabetes எனப்படும் இரண்டாம் வகை நீரிழிவைக் குறைப்பதற்கு உதவுவதாகவும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

முன்பு செய்யப்பட்ட சில பரிசோதனைகளின் போது, பாலில் காணப்படும் நிரம்பிய கொழுப்பு, உடலில் கொலஸ்திரோலின் அளவை அதிகரிக்கிறது எனவும் இதனால் இருதய நோய்கள் ஏற்படுகின்றன எனவும் முடிவெடுக்கப்பட்டது. இதனால் நிரம்பிய கொழுப்புகளைக் குறைவாக பயன்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதற்கு முரணாக அண்மையில் செய்யப்பட்ட 21 ஆய்வுகளின் ஒட்டுமொத்த முடிவாக, பாலில் உள்ள நிரம்பிய கொழுப்பு இருதய நோய்களைக் கூட்டுவதாக எந்த ஒரு ஆதாரமும் இல்லை என தெரிவிக்கின்றன. பாலில் உள்ள நிரம்பிய கொழுப்பு, உடலில் LDL கொலஸ்திரோலை அதிகரித்த போதிலும், அதற்கு சரிசமனாக HDL கொலஸ்திரோலையும் அதிகரிக்கின்றது. LDL எனும் bad cholesterol உம் HDL எனும் good cholesterol உம் ஓரே சீராக அதிகரிப்பதால், நிகர பாதிப்பு எதுவும் ஏற்படுவதில்லை.

இதைவிட, பால் அருந்துவதால் ஏற்படும் LDL கொலஸ்திரோலின் அதிகரிப்பானது, LDL இன் பெரிய மூலக்கூறுகளில் தான் ஏற்படுகிறது. இந்த பெரிய மூலக்கூறுகள் அவ்வளவு பாதிப்பானவை அல்ல. சிறிய Densed LDL மூலக்கூறுகள் தான் உண்மையில் பாதிப்பானவை. இந்த சிறிய மூலக்கூறுகள், பால் அருந்துவதால் குறைக்கப்படுகிறது. எனவே, ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது பாலில் உள்ள கொழுப்பு தீங்கானதல்ல. ஆகையால், கொலஸ்திரோல் மற்றும் இருதய நோய்கள் உள்ளவர்களும் முழு ஆடைப் பாலை சந்தேகமின்றி அருந்தலாம்.

ஒரு சிலருக்கு, பாலிற்கு ஒவ்வாமை தன்மை காணப்படலாம். அவ்வாறானவர்களுக்கு மூக்கடைப்பு, இருமல், மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். இது எந்த உணவிற்கும் ஏற்படக்கூடிய பொதுவான ஒவ்வாமை ஆகும். அவ்வாறு ஒவ்வாமை உள்ளவர்கள் மட்டும் பாலை தவிர்ப்பது நல்லது. அவர்கள், சோயா பால் போன்ற மாற்றீடுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பசுப்பாலை விட ஆட்டுப்பால், எருமைப்பால் போன்ற பல பால் வகைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. உண்மையில், எருமைப் பாலில் கொழுப்பு, புரதம் கலோரி என்பன அதிகமாக காணப்படுகின்றன. ஆட்டுப்பாலிலும் பசுப்பாலை விட அதிக கலோரியும் புரதமும் கொழுப்பும் காணப்படுகின்றன. இவையும் தீங்கற்றவை ஆகும். இவற்றை பயன்படுத்துவதால் உடலிற்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. எனவே, நீங்கள் பாலை எந்த அச்சமும் இன்றி அருந்தலாம். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று கோப்பை பாலை நீங்கள் அருந்தலாம். பாலைக் காய்ச்சி அருந்துவது நல்லது. ஆடையை நீக்காமல் முழுப்பாலாக அருந்துவது சாலச் சிறந்தது. எனவே, நாம் அனைவரும் பாலை அருந்தி, அதன் பயன்களைப் பெறுவோம்.

**Dr. S. கேதீஸ்வரன்**
**பொது வைத்திய நிபுணர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L PHYSICS CLASS

தனிப்பட்ட, குழு வகுப்புகளுக்கும் வீடு வந்தும் கற்பிக்கப்படும்.

**Ranjit Sir**

***(B.Sc, P.G.D.E, S.L.P.S-1)***

தொடர்புகளுக்கு

**077 600 4896**

(6333)

## விற்பனைக்கு

பாவித்த 4' லாச்சி முதிரை மேசை, 5' லாச்சி இல்லாத மேசையும், 4' அகலம் தேக்கு அலுமாரி, 3' அகலம் முதிரை அலுமாரி விற்னைக்கு உண்டு

தொடர்புகளுக்கு

**077 873 0129**

(6334)

## வேலணை பிரதேச சபை
## சவுக்கு மரக்கிளைகள், மரக்குற்றிகள் பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையினால் எதிர்வரும் நத்தார் தினத்தை முன்னிட்டு அல்லைப்பிட்டி உப அலுவலகம், சாட்டி சுற்றுலா தளத்தில் உள்ள சவுக்கு மரக்கிளைகள், மரக்குற்றிகள் வெட்டி எடுப்பதற்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதுடன் சாட்டி சுற்றுலாதள கடற்கரையில் உள்ள கடற்சாதாளைகளும் விற்பனை செய்யப்படும்.

இடம் :- அல்லைப்பிட்டி உப அலுவலகம், சாட்டி சுற்றுலாதளம்
காலம் :- 22.12.2025 திங்கட்கிழமை
அல்லைப்பிட்டி உப அலுவலகம் மு.ப 10.00 மணி
சாட்டி சுற்றுலாதள கடற்கரை மு.ப 11.30 மணி

- ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தை செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
- பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத் தினை செலுத்தி எமது உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் 25.12.2025ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக கடமை நேரத்தில் (8.30-16.15) உரிய அனுமதியுடன் வெட்டி ஏற்றிச்செல்லல் வேண்டும்

சி.அசோக்குமார்,
கௌரவ தவிசாளர்,
வேலணை பிரதேச சபை.

தொடர்புகளுக்கு :- 021 221 1505
21.12.2025 (C-4634)

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 2026 ஆம் ஆண்டிற்கான சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான பகிரங்க கேள்வி பத்திரம் கோரல்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை நடத்துவதற்கான விண்ணப்பப் படிவத்தினை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் (9.00am-3.00pm) 2025.12.22 ஆந் திகதி முதல் 2025.12.26 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளமுடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் 2025.12.29 ஆந் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, இராச வீதி, கோப்பாய் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

கூறுவிலை திறக்கும் காலம் :- 2025.12.29 மாலை 3.00 மணி

மேலதிக விபரங்களை கல்லூரி அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும்.

**பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**
**இராச வீதி, கோப்பாய்.** (C-4633)

## www.EQMarriageService.com
## CALL 076 664 9401

ஒன்லைன் திருமணசேவை
Ensured Quality Lanka (Pvt) Ltd
Bambalapity, Colombo 04

| மணமகன் தேவை | மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|---|
| 1994, கிறிஸ்தவம் பட்டதாரி **ENGINEER** சொந்த இடம்: செம்பியன்பற்று மணமகள் பதிவு இல:12311 | 1994, இந்து, புனர்பூசம் பட்டதாரி **MANAGEMENT ANALYST** சொந்த இடம்: யாழ்ப்பாணம் மணமகன் பதிவு இல:12324 | 1996, இந்து, மஹம் பட்டதாரி **I.T MANAGER, SWISS** சொந்த இடம்: கொடிகாமம் மணமகள் பதிவு இல:10698 |
| 1999, இந்து, ரேவதி பட்டதாரி **DOCTOR, U.K** சொந்த இடம்: திருநெல்வேலி மணமகள் பதிவு இல:12295 | 1991, இந்து, உத்தரட்டாதி பட்டதாரி **RESEARCH ASST.** சொந்த இடம்: கரவெட்டி மணமகன் பதிவு இல:12317 | 1993, இந்து, அவிட்டம் பட்டதாரி **SOFTWARE ENGINEER** சொந்த இடம்: கனகராயன்குளம் மணமகள் பதிவு இல:12291 |
| 1999, இந்து, உத்தரம் பட்டதாரி **ENGINEER** சொந்த இடம்: பருத்தித்துறை மணமகள் பதிவு இல:12305 | 1994, இந்து, மூலம் பட்டதாரி **FINANCE MANAGER** சொந்த இடம்: யாழ்ப்பாணம் மணமகன் பதிவு இல:12313 | 1995, இந்து, திருவாதிரை பட்டதாரி **CIVIL ENGINEER, AUSTRALIA** சொந்த இடம்: வேலணை மணமகள் பதிவு இல:11788 |
| 1992, இந்து, திருவோணம் பட்டதாரி **ENGINEER, CANADA** சொந்த இடம்: அனலைதீவு மணமகள் பதிவு இல:11757 | 1998, இந்து, பூசம் பட்டதாரி **ARCHITECT** சொந்த இடம்: கொக்குவில் மணமகன் பதிவு இல:12301 | 1995, இந்து, உத்தரம் பட்டதாரி **DIRECTOR** சொந்த இடம்: யாழ்ப்பாணம் மணமகள் பதிவு இல:12281 |
| 1995, இந்து, பூசம் பட்டதாரி **AUDIT MANAGER** சொந்த இடம்: காரைநகர் மணமகள் பதிவு இல:12294 | 1998, இந்து, கேட்டை பட்டதாரி **ENGINEER** சொந்த இடம்: பருத்தித்துறை மணமகன் பதிவு இல:12300 | 1993, இந்து, புனர்பூசம் பட்டதாரி **ENGINEER, SWISS** சொந்த இடம்: யாழ்ப்பாணம் மணமகள் பதிவு இல:10798 |

(202)

**தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே. CALL 076 664 9401**

## பெண் வேலையாட்கள் தேவை

இனிப்புகள், பலகாரங்கள் (மிக்சர், தட்ட வடை, பூந்தி லட்டு போன்றவை) செய்யத் தெரிந்தவர்கள் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(உணவு தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்)

தொடர்புகளுக்கு

**077 196 6541**

(6316)

## மணிவிழா வாழ்த்து

திருமதி.
**சாந்தினி வாகீசன்**
அதிபர்
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்

21.12.2025 இன்று அதிபர் பணியில் இருந்து ஓய்வு பெறும் அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்களையும் பிறந்த தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்




வாழ்த்துவோர்-
கோட்டக் கல்விப் பணிப்பாளரும் அதிபர்கள் சங்கமும்
கோப்பாய்க் கல்விக் கோட்டம்

## முகாமையாளர்கள் பதவி வெற்றிடம்

யாழ் நகரில் அமைந்துள்ள அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் ஹோட்டலுக்கு (ASR Hotel), அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் திருமண மண்டபத்திற்கு (ASR wedding Hall) முகாமையாளர்கள் தேவை. முகாமைத்துவகற்கைநெறி (Hotel Management) முடித்திருத்தல் வேண்டும். மற்றும் அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். தங்கள் சுயவிபரக்கோவையை கீழ்காணும் முகவரிக்கு நேரில் கொண்டு வரவும். ஆங்கிலம் சரளமாக பேச, எழுத தெரிந்திருத்தல் வேண்டும். சிங்களம் பேச எழுத தெரிந்திருத்தால் முன்னுரிமை வழங்கப்படும்.

நன்றி

**ஆர்.வி.ஜி பீடி கம்பனி,**
**இல. 58 குறுக்கு வீதி, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி இலக்கம் :- 021 222 4766, 021 222 6806**

(6302)

## யாழ் நகரில் அமைந்துள்ள ஆர்.வி.ஜி பீடி கம்பனிக்கு வேலையாட்கள் தேவை

**01. உதவியாளர் (21-45 வயதிற்குட்பட்ட ஆண்கள்)**

**தகமைகள் :** முன்பு வேலை செய்த அனுபவம் மற்றும் வேலை செய்த இடத்தின் சான்றுப்பத்திரம், வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் உடன் வரவும் (Bio Data)

ஆர்.வி.ஜி பீடிகளை எமது ஸ்தாபனத்தில் நேரடியாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.

கீழ் காணும் முகவரிக்கு நேரில் வரவும்

**ஆர்.வி.ஜி பீடி கம்பனி,**
**இல. 58 குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இலக்கம் 021 222 4766, 021 222 6806**

(6301)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டாவளையில் நடமாடும் சேவை





(கண்டாவளை)

ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலில் Clean SriLanka நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் நடமாடும் சேவை வேலைத்திட்டம் கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை குமரபுரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சுப்பிரமணியம் இராசம்மா மணிமண்டபத்தில் இடம்பெற்றது.

கண்டாவளை பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன் தலைமையில் இடம்பெற்ற இந் நடமாடும் சேவையில் பல்வேறு சேவைகள், பணிகள் மக்களுக்கு ஒரே நாளில் முன்னெடுக்கப்பட்டன.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், மேலதிக அரசாங்க அதிபர் இ. நளாஜினி, மேலதிக அரசாங்க அதிபர் (காணி) அ. அஜிதா, கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் இணைப்புச் செயலாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், கண்டாவளை பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், நடமாடும் சேவையுடன் தொடர்புடைய திணைக்கள தலைவர்கள், உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நடமாடும் சேவையில் பெருந்திரளான மக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

## நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் மார்கழி மாதக் கலைநிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த கலைநிகழ்வின் மார்கழி மாதக் கலைநிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தின் தலைவர் கவிஞர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் இறைவணக்கத்தை மன்ற மாணவர்களும் வாழ்த்துரையை மன்றத்தின் காப்பாளர் கலாநிதி.ஆறு.திருமுருகனும் வழங்கவுள்ளனர்.

இசையரங்கில் குரலிசை -சற்குணராஜசர்மா யதுர்சன், வயலின்-கேதீஸ்வரன் வேலதீபன், மிருதங்கம்-அருமைநாதன் சண்முகப்பிரியன், கஞ்சிரா-பாலசுந்தரம் ஞானவேல், நாமுழவு-நித்தியானந்தம் மோகனதர்சன் ஆகியோர் இணையவுள்ளனர்.

நீர்வைக்கந்தன் புராண இதிகாச பாடசாலை மாணவர்கள் ஞான ஏந்தல் மா.ந.பரமேஸ்வரனின் நெறியாள்கையில் வழங்கவுள்ள பக்த நந்தனார் இசைநாடகமும் நடைபெறவுள்ளது. (8)

## நாவற்குழியில் கனமழையால் இடிந்து விழுந்தது வீடு

(சாவகச்சேரி)

யாழில் பெய்த கனமழை காரணமாக தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாவற் குழி ஐந்து வீட்டுத்திட்ட குடியிருப்பிலுள்ள வீடொன்று பகுதியளவில் இடிந்து விழுந்துள்ளது.

இந்த அனர்த்தமானது கடந்த புதன்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

அனர்த்தத்தால் எவருக்கும் பாதிப்பு ஏற்படாத போதிலும், வீட்டின் ஏனைய பகுதிகளும் இடிந்து விழும் அபாய நிலையிலேயே காணப்படுகின்றன.

இந்நிலையில் குறித்த இடத்திற்கு வருகை தந்த தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரான்சிஸ் சந்திரா சத்தியசோதி அனர்த்த நிலைமையைப் பார்வையிட்டதோடு, உடனடி உதவிகளை செய்யுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்தார். (8-30)

## பொதுக்கூட்டம்

(அராலி)

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் நோயாளர் நலன்புரிச் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

எனவே வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் நலன்விரும்பிகள் அனைவரையும் பங்குபற்றுமாறு வைத்தியசாலை பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (8-104)

## நாலவர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சுதுமலை வடக்கு ஈஞ்சடி நாவலர் சனசமூக நிலைய நாவலர் குருபூசை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் ஈஞ்சடி ஞான வைரவர் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மங்கள விளக்கேற்றல், நாவலர் பெருமானை வழிபடுதல், தேவாரம், நாட்டியாஞ்சலி, தலைமையுரை, பஜனை, சொற்பொழிவு, விருந்தினர்கள் உரை, கற்றல் உபகரணம் வழங்கல், நன்றியுரை, பிரசாதம் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (8)

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 27.12.2025 ஆம் திகதியன்று காலை 9 மணிக்கு மோட்டார் வாகனங்கள் மற்றும் மோட்டார்சைக்கிள்கள் என்பன ஏல விற்பனை செய்யப்படும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மாவட்ட / நீதிவான் நீதிமன்ற வழக்கில் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் வாகனங்கள், கையடக்கத் தொலைபேசிகள், வெளியிணைப்பு இயந்திரம், படகு, தங்க ஆபரணங்கள், மற்றும் இதர பொருட்களின் பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 29.12.2025 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலவிற்பனையில் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாக, வங்கி அட்டைகள் ஊடாக செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஏலத்தில் பொருட்களை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான வாகனங்கள், மோட்டார் வண்டிகள் என்பன எதிர்வரும் 2025.12.27 ஆம் திகதி காலை 10 மணிக்கும் துவிச்சக்கர வண்டிகள், சவள்கள் மற்றும் இதர பொருட்கள் என்பன 2025.12.28 ஆம் திகதி காலை 10 மணிக்கும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவ் ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்பும் பொதுமக்கள், குறிப்பிட்ட பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் பொருட்களினை பதிவாளரின் அனுமதியுடன் பொதுமக்கள் பார்வையிட முடியும்

ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளித்தல் வேண்டும்,

ஏலவிற்பனையின் போது மதிப்பிடப்பட்ட விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏலவிற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி ஏலப்பொருளினை அப்புறப்படுத்த வேண்டும். கொடுப்பனவுகள் பணமாக மட்டும் செலுத்துதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

### பரு.துறை ஆதார வைத்தியசாலையின்

## சிற்றுண்டிச்சாலையை திறப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்

### நோயாளர்கள் கோரிக்கை

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் உள்ள சிற்றுண்டிச்சாலை தொடர்ந்தும் மூடப்பட்டிருப்பதனால் நோயாளர்கள் உணவு மற்றும் சுடுநீர் பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி வைத்தியசாலை உணவகம் கேள்வி கோரல் விடப்பட்ட நிலையில் அதிகூடிய தொகை கேள்வி கோரல் காரணமாக எவரும் உணவகத்தை எடுப்பதற்கு முன்வரவில்லை. இதனால் உணவு சாலை மூன்று மாதமாக தொடர்ந்து மூடப்பட்டுள்ளதாக நோயாளர்கள் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கேள்வி கோரல் மூலம் எவரும் உணவகத்தை எடுக்காத நிலையில் வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் உணவுச் சாலையை நடத்த வேண்டும் அல்லது குறைந்த கேள்வி கோரலை கோரி மேற்படி உணவு சாலையை உடனடியாக திறப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நோயாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நேயத்தோடு மக்களின் உணர்வைப் புரிந்து கொண்டால், தனது மரியாதை தானே உயரும்
~ அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## கர்ணன் கொடை இழந்ததும் கஜேந்திரகுமார் சென்னை சென்றதும்

குருசேத்திரப் போர்க்களத்தில் கர்ணன் வீழ்ந்து கிடக்கின்றான். அவன் செய்த புண்ணியம் அவனைக் காத்து நிற்கிறது.

கர்ணன் செய்த புண்ணியத்தைத் தானமாகப் பெற்றால் அன்றி, அவன் மரணிப்பது சாத்தியமாகாது.

இந்த உண்மையை உணர்ந்த திருமாவளவன் அந்தணர் வேடம் தரித்து போர்க்களம் சென்று கர்ணா! உன்னை நாடித் தேடி வந்தேன். நான் செய்த பாவம் போலும் உன்னை இந்த நிலையில் காணுகின்ற அபாக்கியசாலியாகினேன் எனப் போலியாய் கலங்குகிறான்.

கொடை வள்ளலாகிய கர்ணன் தன்னிடம் வந்துற்ற வேதியரைப் பார்த்து ஐயனே! என்ன வேண்டும் சொல் என்றான்.

கர்ணா! கொடையால் நீ ஈட்டிய புண்ணியத்தை எனக்குத் தருக என யாசிக்கின்றார் வேதியர்.

கர்ணனோ மிக்க மகிழ்ந்து தன் உடலைத் துளைத்து தன் உதிரத்தை எடுத்து வேதியரிடம் கொடுத்து; யான் செய் புண்ணியம் யாவும் உன்னிடம் சேருக! எனக் கூறியதும் கர்ணனின் உயிர் பிரிந்தாயிற்று.

ஆக, கொடைக்குப் பெயர் போன கர்ணன் அதனை இழந்து போவதற்கு அந்தத் திருமாவளவனே காரணம் என்றுணர்க.

மகாபாரத இதிகாசம் கூறுகின்ற இந்தக் கதை நினைவுக்கு வந்தபோது, அது சரி தமிழ்த் தேசியப் பேரவை என்ற அமைப்பின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தற்போது இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

அவருடன் பேரவை சார்ந்தவர்களும் உடன் சென்றுள்ளனர்.

பொதுவில் இந்தியாவுடன் ஒத்துப் போகாத மனநிலையில் இருந்தவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தவிர, தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள் என அவர் யாரை மதிப்பீடு செய்தாலும் அவர்களை இந்திய சார்புடையவர்கள் என விமர்சிப்பதை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பு ஒருபோதும் தவிர்த்ததில்லை.

இவ்வாறு இருந்த கஜேந்திரகுமார் திடீரென இந்தியாவுக்குச் சென்று; தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அதிமுக தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான், பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரம் உள்ளிட்ட தலைவர்களைச் சந்தித்துள்ளார்.

அவர்களைச் சந்திப்பது நல்லது. அதிலும் தமிழகத்துக்குச் சென்றால் ஒரு தரப்பை மட்டும் சந்திக்காமல் பலதரப்புகளையும் சந்திப்பது உத்தமமானது.

தவிர, இச்சந்திப்பின் விளைவுகள் எவ்வாறாக இருக்கும் மற்றும் இவர்கள் சந்தித்த காலநேரம் எங்களுக்கா? அவர்களுக்கா? சாதகமானதென்பன தொடர்பில் பின்னர் பார்க்கலாம்.

ஆனால் கஜேந்திரகுமார் தரப்பு தமிழகத்துக்குச் செல்வதற்கு மூலகாரணம் தொல்.திருமாவளவன் என்பது மட்டும் தெரிந்த உண்மை.

ஆக, அன்று மகாபாரதத்தில் கர்ணன் கொடையை இழந்து போவதற்கும் இன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்தியா செல்வதற்கும் மூல காரணன் திருமாவளவனே என்றறிக.

## செல்வந்தர்களிடம் நிதியுதவி பெறும் எங்களது கொள்கையையே அநுர அரசு பின்பற்றுகிறது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

சுகாதாரத் துறையின் வளர்ச்சிக்காக செல்வந்தர்களிடம் இருந்து நிதியுதவிகளைப் பெறும் எங்களது கொள்கையையே தற்போதைய அரசாங்கம் பின்பற்றி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அரநாயக்க ஆதார மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக வழங்கிய பின்னர் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சுகாதாரத் துறையை மேம்படுத்த செல்வந்தர்களிடம் இருந்து பங்களிப்புகளைப் பெறும் திட்டத்தை நாங்கள் ஏற்கனவே முன்மொழிந்து நடைமுறைப்படுத்தியும் காட்டியுள்ளோம்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையானது, எமது இந்தக் கருத்தாக்கத்தையே அரசாங்கம் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது.

தமது கட்சியின் இவ்வாறான தூரநோக்குச் சிந்தனைகளை அரசாங்கம் இப்போது கையில் எடுத்திருப்பது, தமது அரசியல் நிலைப்பாட்டிற்குக் கிடைத்துள்ள வெற்றி என எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது சுட்டிக் காட்டினார். (ம-7)

## முறையற்ற நிர்வாகத்தால் மக்களுக்கு கடும் இன்னல்கள்

### நாமல் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அநுர அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகத்தால் பொதுமக்கள் கடும் இன்னல்களைச் சந்தித்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டில் நிலவும் இடர்நிலைகள் மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றிய மற்றும் கிராம மட்டத்திலான குழுக்களில் அங்கம் வகித்தவர்களுக்கு தற்போது கிராமங்களில் பெரும் அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

பதுளை மற்றும் குருநாகல் போன்ற மாவட்டங்களில் இயற்கை அனர்த்தங்களினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், அரசாங்க அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கிடையே முறையான ஒருங்கிணைப்பு இல்லை.

பதுளை மாவட்டத்தில் பலத்த மழையினால் கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நிவாரண உதவிகள் முறையாக மக்களைச் சென்றடையவில்லை.

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தில் குருநாகல் மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குவதற்குக்கூட அரசாங்கம் விழாக்களை நடாத்துவது வேடிக்கையானது.

சுகாதாரத் துறையில் நிலவும் குறைபாடுகள் மற்றும் தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பான சர்ச்சைகளை அவர் கடுமையாகச் சாடினார். கடந்த காலங்களில் இத்தகைய தவறுகளுக்கு அமைச்சர்களே பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறியவர்கள், இன்று அதிகாரிகளின் மீது பழியைப் போட்டுத் தப்பிக்கப் பார்க்கிறார்கள் என்றார். (ம-7)

## லொறி மோதியதில் மூவர் உயிரிழப்பு

(நுவரெலியா)

கொட்டகலை பத்தனை சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து மீது லொறி மோதியதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த சம்பவம் திம்புல்ல பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் பத்தனை சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

டயகம பகுதியில் நேற்றுக்காலை 4.45 மணியளவில் புறப்பட்டு வந்த பேருந்து பத்தனை ஊடாக நாவலபிட்டி கண்டி செல்லும் போது தேநீர் அருந்துவதற்காகவும் சிறுநீர் கழிப்பதற்காகவும் நிறுத்தப்பட்ட வேளையிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

அதில் இருவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளதுடன் மற்றொருவர் கடும்காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## தையிட்டி விகாரையில் புதிய புத்தர் சிலை

### பாதுகாப்புக் கோரி கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தையிட்டி சட்டவிரோத திஸ்ஸ ராஜ மகா விகாரையில் புதிய புத்தர் சிலையை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவரும் நிலையில், அதற்கு பாதுகாப்பு அனுமதி கோரி பாதுகாப்பு தரப்பினருக்கு மகா சங்கத்தினரால் எழுத்து மூலம் கடிதமொன்று அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில், எதிர்வரும் 2026 தை மாதம் மூன்றாம் திகதி அன்று காலை 10.00 மணியளவில் கன்யாசந்துவ தும்ரி ஸ்தாச சி தி ராஜ விஹாரையில் இருந்து கொண்டு வரப்பட்டு, புத்தர் சிலை திஸ்ஸ ராஜ விகாரையில் நிறுவப்படும். இதற்காக பக்தர்களின் பங்கேற்புடன் ஊர்வலம் நடத்தப்படுவதோடு, இது தொடர்பில் தையிட்டி திஸ்ஸ விகாரையின் தலைமை தேரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அதில் பங்கேற்பவர்கள் எந்த பயமோ சந்தேகமோ இல்லாமல் விகாரைக்குச் செல்ல வேண்டும். பொலிஸார் அதற்குப் பாதுகாப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. (ம-7)

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு

அம்பாறை, தெஹிய த்தகண்டிய - உத்தலபுர பகுதியில் மின்சார வேலியில் சிக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கலேன்பிந்துனுவெவ பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் என்று தெரிய வந்துள்ளது.

இவர் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காகச் சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலைக்கு டின் மீன்கள் விற்பனை

## கடைகளின் உரிமையாளர்களுக்கு அபராதம்

(கொழும்பு)

நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிக மாக டின் மீன்களை விற்பனை செய்த இரண்டு கடைகளின் உரிமை யாளர்களுக்கு எதிராக 2 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

இந்த உத்தரவு நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை பிறப்பிக்கப்பட் டுள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் அதி காரசபைக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த இரு கடைகளின் உரிமையாளர்களுக்கு எதிராக நீதி மன்றில் வழக்கு தொடரப்பட்டுள் ளது. இந்த வழக்கு நேற்று விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது கடைகளின் உரிமையாளர்கள் தங்க ளது தவறை ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து இரண்டு கடை களுக்கும் எதிராக 2 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து நீதவான் உத் தரவிட்டுள்ளார். (நி)

# அபாய நிலையில் 10813 இடங்கள்!

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தகவல்



(கொழும்பு)

நாட்டில் அபாய நிலையில் உள்ள 10,813 இடங்களை ஆய்வு செய்ய 5,374 கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேசிய கட்டட ஆரா ய்ச்சி நிறுவனம் தெரிவித்துள் ளது.

இவ்வாறு கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளில் 1,426 இடங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சிரேஷ்ட புவியியலாளர் வசந்த சேனாதீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரி வித்த வசந்த சேனாதீர,

பாதிக்கப்படக்கூடிய இடங்களை ஆய்வு செய்ய சுமார் 45 குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 12 குழுக்கள் கண்டி மாவட்டத்திற்கு மட்டும் அனுப்பப்பட்டுள்ளதுடன் இந்த கண்காணிப்பு நடவடிக்கைக ளுக்கு உள்ளூர் குழுக்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றத்திற்கு திட்ட மிடப்பட்ட இடங்களையும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வு செய்யும். டித்வா சூறாவளி காரணமாக 10 மீற்றருக்கும் அதிகமான நிலச்சரிவுகள் ஏற்பட்ட 1,241 இடங்களை செயற்கைக்கோள் படங்கள் மூலம் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது.

10 மீற்றருக்கும் குறைவான நிலச்சரிவுகள் ஏற்பட்ட பல இடங்கள் உள்ளன என்றும், நிலச்சரிவுகள், மற்றும் பாறை சரிவுகள் ஏற்பட்ட இடங்கள் பல உள்ளன என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவ னத்தின் சிரேஷ்ட புவியியலாளர் கலாநிதி வசந்த சேனாதீர குறிப்பிட் டுள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 1000 | 800 | 800 | 800 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 250 |
| பச்சைமிளகாய் | 1300 | 1300 | 1200 | 1200 |
| தக்காளி | 600 | 600 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 150 |
| கோவா | 350 | 350 | 300 | 450 |
| கரட் | 400 | 330 | 300 | 400 |
| பூசணி | 120 | 140 | 100 | 120 |
| புடோல் | 350 | 450 | 300 | 400 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 250 | 200 |
| பாகற்காய் | 1400 | 1600 | 1500 | 2000 |
| வெண்டக்காய் | 350 | 300 | 300 | 600 |
| கருணைக்கிழங்கு | 300 | 260 | 300 | 400 |
| பயற்றங்காய் | 800 | 650 | 600 | 1000 |
| லீக்ஸ் | 400 | 350 | 250 | 400 |
| பீற்றூட் | 500 | 500 | 500 | 600 |
| கறிமிளகாய் | 800 | 1000 | 1200 | 1200 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- |
| போஞ்சி | 800 | 600 | 1000 | 800 |
| கத்தரிதம்புள்ள | 800 | 700 | 500 | 800 |
| கீரை - 1 பிடி | 150 | 120-180 | 200 | 200 |
| தேசிக்காய் | 600 | 800 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 120-180 |
| இராசவள்ளி | 800 | 900 | 600 | 600 |
| வெங்காயப்பூ | -- | 1000 | 600 | -- |
| முள்ளங்கி | 300 | 250 | 200 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 200 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 150 |
| ஈரப்பலா | 100 | 100-150 | 100 | 200 |

# இராசிபலன்

21.12.2025
மார்கழி 06 , ஞாயிற்றுக்கிழமை
பிரதமை முற்பகல் 9.25 மணி வரை

பூராடம் பின்னிரவு 3.57 மணிவரை
சுபநேரம் 9.24-10.54 மணிவரை
இராகுகாலம் 4.54-6.24 மணிவரை

சந்திராஷ்டமம்- மிருகசீரிடம்.

வளவன்

**மேஷம்**: இழுபறியாக இருந்த காரியங்களில் முன் னேற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மை யுண்டு.

**ரிஷபம்**: கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழி பாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்**: குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை யில் முன்னேற்ற முண்டு, நட்பு வட்டம் விரிவ டையும் நாள்.

**கடகம்**: மறைமுக எதிர்ப்புகள் அகலும், செய் தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வர வேண்டிய பாக்கிகள் வந்து சேர லாம்.

**சிம்மம்**: சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புண்ணிய காரியங் களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்ற முண்டு.

**கன்னி**: தொலைபேசி வழியில் கேட்கும் செய்தி களால் உற்சாகம டைவீர்கள், வரு மானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்**: ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**: உறவினர்களின் சந் திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், சுபசெய் திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு**: மற்றவர்களின் விம ர்சனங்களை மறந்து செயற்படுவது நல் லது, ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மகரம்**: வீட்டை அழகு படுத்தும் எண்ணம் உருவாகும், பயணங் களால் பிரபலமான வர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

**கும்பம்**: பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்**: பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்க ளின் தகுதியை உயர் த்தும், வீட்டை சீர மைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுக முண்டு,

இளமையில் முயற்சி முதுமையில் காக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தையிட்டி...

உறுப்பினர்கள் மற்றும் காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஜின் தோட்டை நந்தாராம தேரருக்கு வழங்கப்படவுள்ள அமரபுர ஸ்ரீ கல்யான வம்ச குழுவின் வட இலங்கை துணை தலைமை சங்கநாயக பதவிக்கான ஸ்ரீ சன்னாஸ் சான்றிதழ் மற்றும் விஜின் சான்றிதழ் வழங்கும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை புத்தசாசன சமயம் மற்றும் கலாசார அமைச்சர் ஹினிதும சுனில் செனெவி தலைமையில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை தையிட்டி விகாரைக்கு முன்பாக "இதொரு சட்டவிரோதமான விகாரை" என மும்மொழிகளில் அறிவித்தல் பலகை நாட்டுவது எனவும், விகாராதிபதிக்கு வழங்கப்படவுள்ள கௌரவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஞாயிற்றுக்கிழமை போராட்டம் முன்னெடுப்பது என்றும் கடந்த வியாழக்கிழமை (18) வலி வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் தேசிய மக்கள் சக்தியின் பூரண ஆதரவுடன் பிரேரணை நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## சுவர்...

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் முல்லைத்தீவு விசுவமடுவைச் சேர்ந்த ரவிச்சந்திரன் டிலக்சன் (வயது-17) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

குறித்த சிறுவன் குடும்ப வறுமை காரணமாக கட்டட வேலைக்குச் சென்றுள்ளார். நேற்று முன்தினம், குருநகர் பகுதியில் பழைய வீட்டினை இடித்துக்கொண்டிருந்தார். ஒரு பக்க சுவரினை இடித்துவிட்டு அந்த சுவர் விழப்போகின்றது என அறையின் உள்ளே ஓடினார்.

இதன்போது மற்றைய சுவர் அவர் மீது விழுந்ததில் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60,104)

## முழுமையான...

முன்தினம் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நிலச்சரிவு அபாயம் தொடர்வதால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் பாடசாலைகளை இடமாற்றம் செய்ய வேண்டிய தேவை இருப்பதால், டித்வா புயலில் இருந்து முழுமையாக மீள்வதற்கு குறைந்தது இரண்டு ஆண்டுகள் ஆகலாம்.

666 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும், சிலவற்றை இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளதாகவும், உயர்கல்வி நிறுவனங்கள் குறிப்பாக பேராதனை பல்கலைக்கழகம் கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

## அனர்த்தத்தால்...

'Rebuilding Sri Lanka' வேலைத்திட்டத்தின் கீழ் மக்களின் வாழ்க்கையை மீட்டெடுப்பது குறித்த விசேட கலந்துரையாடல் நேற்று (20) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற போது அவர் இந்தப் பணிப்புரையை விடுத்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, வீடுகளைச் சுத்தம் செய்வதற்காக வழங்கப்படும் 25,000 ரூபா மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதற்காக வழங்கப்படும் 50,000 ரூபா ஆகியவற்றை இந்த மாத இறுதிக்குள் பாதிக்கப்பட்டவர்களின் கைகளுக்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அத்துடன்,வீடுகள் மற்றும் பயிர்ச் சேதங்களுக்கான இழப்பீடுகளை வழங்கும் பணிகளைச் செயற்திறனுடன் முன்னெடுக்க வேண்டும் எனவும் எவரையும் கைவிடாத வகையில் தகுதியுள்ள அனைவருக்கும் வெளிப்படைத்தன்மையுடன் இழப்பீடு கிடைக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி அறிவுறுத்தினார். (ம-7)

## இலங்கை...

நாள் விஜயமாக கொழும்புக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கைத் தலைவர்களைச் சந்தித்துப் பேசும் அவர், கொழும்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி (சங்குக் கூட்டணி) ஆகிய தரப்பினரை ஒன்றாகச் சந்திக்கவிருக்கின்றார் எனத் தெரியவருகின்றது.

பேரிடரால் பெரிதும் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உடனடி அயல்நாடு என்ற முறையில் பெருமளவில் விரைந்தளதும் தொடர்ந்தும் இந்தியா உதவி வரும் பின்னணியில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஒரு நாள் விஜயமாகக் கொழும்பு வருகின்றார். (ம-7)

## பண்டி...

மேம்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கைப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பண்டிகைக் காலத்தில் அமைதியான மற்றும் பாதுகாப்பான சூழலை உறுதி செய்ய அனைத்து மூத்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கும் பொலிஸ்மா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சருமான எப்.யூ.வுட்லர் தெரிவித்தார்.

இந்த பண்டிகைக் காலத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கம் ஏற்படுவதை உறுதி செய்வதற்காக 2,500க்கும் மேற்பட்ட பொலிஸாரை பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். (ம-7)

## விபத்...

யைச் சேர்ந்த எஸ்.வரதராணி (வயது-64) என்பவரே உயிரிழந்தவராவார்.

மூளாய் பகுதியைச் சேர்ந்த குறித்த தாயும் மகளும் யாழ். நகரப் பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றில் பூஜையில் கலந்து கொள்வதற்காக மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர்.

இதன்போது எதிர்த் திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று முந்திச்செல்ல முற்பட்டவேளை நிலைகுலைந்த தாயும் மகளும் மோட்டார் சைக்கிளுடன் நடு வீதியில் விழுந்துள்ளனர்.

இதன்போது எதிர்த்திசையில் வந்த யாழ்.மாநகர சபையின் கலி பவுசர் அந்தத் தாயின் தலையின்மீது ஏறியதில் சம்பவ இடத்திலேயே குறித்த பெண் உயிரிழந்தார்.

படுகாயமடைந்த மகள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கழிவகற்றல் வாகனச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,33,104)


மஹஜன சம்பத
திகதி 2025.12.20 | சீட்டிழுப்பு இலக்கம் 6049
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: O 5 8 2 8 9 7
அத சம்பத: O 2 8 9 7 | சீட்டிழுப்பு இலக்கம் 0624
National Lotteries Board

சுப தவசக
திகதி 2025.12.20 | சீட்டிழுப்பு இலக்கம் 0165
கடகம் 09 17 26

தன நிதானய
திகதி - 2025.12.20 | சீட்டிழுப்பு இலக்கம் - 2079
J 07 21 28 36 J
Double Chance

மெகா பவர்
திகதி 20/12/2025 | சீட்டிழுப்பு இலக்கம் 2397
K 08 33 35 60 65

ஜய
திகதி 2025.12.20 | சீட்டிழுப்பு இலக்கம் 0317
D 4 3 9 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4291 | சீட்டிழுப்பு திகதி 20.12.2025
U 18 32 64 75
U

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.12.20 | சீட்டிழுப்பு இலக்கம் 1358
மீனம் 21 24 38 45 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
Supiri Dhana Sampatha 20.12.2025 | வெற்றி வாரம் 0757
ஆங்கில எழுத்து B | 3 2 5 2 0 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30.926.118.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3023 | சீட்டிழுப்பு திகதி 2025.12.20 | தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 30 44 63 68 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.82,944,074.40

சனிதா
திகதி 20.12.2025 | வெற்றி வாரம் 5184
21 61 67 80 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,178,297.20

சசிரி
வெற்றி வாரம் 853 | சீட்டிழுப்பு திகதி 20.12.2025 | சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 27 34
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4735 | சீட்டிழுப்பு திகதி 20.12.2025 | தினம் சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 25 38 53 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,657,940.40

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 40 32 34 35 49
சீட்டிழுப்பு வாரம் 2199 | 20.12.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.614,370,952.60

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை | வெற்றி வாரம் 2849 | சீட்டிழுப்பு திகதி 2025.12.20
09 63 65 73 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,205,996.80


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வசாவிளானில்**
**3 ½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு**

- இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடிப் பாதையுடன்
- செம்மண் காணி
- நன்னீர் ஊற்று நிலம்
- பலாலி வீதி 150m தூரம்
- வசாவிளான் மத்திய கல்லூரி 250m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள காணி விற்பனைக்குண்டு

**074 029 2338, 076 990 3039**

(1822)


## யானை தாக்கியதில் விவசாயி பலி

அநுராதபுரம், தம்புத்தேகம, மலிய தேவபுர பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி விவசாயி ஒருவர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

இவர் தனது விவசாய நிலத்திலிருந்தபோதே இவ்வாறு காட்டு யானைத் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் மலிய தேவபுர பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். (ம-7)


## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= | Max 2Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 270/= | |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 235/= | Max 5 Kg |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 230/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 199/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 250/= | Max 5 Kg |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2670/= | Max 03 |
| 1Kg கடலை | - 349/= | |
| 1Kg செத்தல் NO 1 | - 850/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 210/= | |
| 1Kg குத்தரிசி | - 255/= | |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:-
happy basket.lk இனை நாடவும்.

(1821)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30




## 22 உடன் விற்பனைக்கு 22

- யாழ். பிறவுண் வீதியில் 2 பரப்புக் காணியும் ஒரு பரப்புக் காணியும்
- யாழ். வைமன் வீதியில் 2 பரப்புக் காணியும் 1½ பரப்புக் காணியும்
- யாழ். வைத்தீஸ்வரா பாடசாலைக்கு அண்மையில் 3 பரப்பில் அமைந்த அதிநவீன மாடி வீடும்
- யாழ். மனோகரா தியேட்டருக்கு அருகில் 2 ½ பரப்பில் அமைந்த வடக்கு வாசல் வீடும்
- யாழ். விக்டோரியா வீதியில் விக்டோரியா வீதி முகப்புடன் 16 பரப்புக் காணியும்
- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சிக்னல் சந்திக்கு அருகில் 16 பரப்புக் காணியும்
- யாழ். பரமேஸ்வரா வீதியில் பலாலி வீதி முகப்புடன் 06 பரப்புக் காணியும்
- யாழ். 3ம் குறுக்குத் தெருவில் 3 பரப்பில் அமைந்த வீடும் காணியும்

(C-4636)

தொடர்புகளுக்கு: **0777 232 535**


# மரண அறிவித்தல்



## ஐயம்பிள்ளை மாணிக்கம்

புத்தூரைப் பிறப்பிடமாகவும் தம்பாலை அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயம்பிள்ளை மாணிக்கம் அவர்கள் கடந்த (18.12.2025) வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தாமு - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் சத்தியமூர்த்தி, கருணாநிதி, செல்வநிதி, கலாநிதி, கிருபாமூர்த்தி, தயாநிதி, விக்கினேஸ்வரமூர்த்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கந்தையா, நாகமுத்து, காலஞ்சென்ற லட்சுமி, வள்ளியம்மை மற்றும் முத்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சுசிலாதேவி, இராசசுலோசனா, துரைராஜா, அமிர்தலிங்கம், தவராஜா, குலேந்திரா, காலஞ்சென்ற சாந்தகுமார் மற்றும் ரஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, ஆறுமுகம், சின்னத்தம்பி, வேலுப்பிள்ளை, செல்லத்துரை ஆகியோரின் மைத்துனியும் திலீப்காந், ஜெயக்காந், கம்சன், தீபன், தினேஸ், திலக்சன், துளசிகா, நரோஜன், தூரிகா, திலீசன், கரிசன், பொன்னுசா, ஜதுயா, விதுஜா, மதுஜா, கிரிசாந், பிரசாந், தக்ஷிகா, அஸ்வின், அனிக்சா, வேணுஜா, றொமியா, ஜஸ்மினா, றஜிதா, பர்மிளா, அபிநயா, சுசான், நிருஜா, வினுசன், சாரங்கி, கம்சா, சுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபிசன், ஜெனிக்ஷா, அஜேஸ், சைனிகா, சபிஷா, திக்ஷா, ஆருத், கஸ்வின், கஜோஷ், விகாஷ், தாய்ஷா, சாருஸ், சஸ்மிகா, அமரன் ராம், திஷாரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2025) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பிறப்பு** 17.05.1936 **இறப்பு** 18.12.2025

துரைராஜா தினேஸ் - 077 560 8862
துரைராஜா தீபன் - 077 718 4876
ஐயம்பிள்ளை கிருபாமூர்த்தி - 077 497 2736 (6340)

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.